# எழுத்து

நவம்பர் 63 ஐந்தாம் ஆண்டு 50 காசு

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

| | | |
|---|---|---|
| புத்தகங்களை தேர்ந்தெடுத்தல் | தலையங்கம் | 206 |
| பதுப் பார்வையில் பழைய தமிழ்க்கவிதை | சி. கனகசபாபதி | 207 |
| நானும் தமிழும் | சகுந்தலா பத்மனுபன் | 210 |
| சத்யாக்ரகி | சி. சு. செல்லப்பா | 211 |
| கருவா?நடையா? | வித்வான் இரா. இராசகோபாலன் | 219 |
| பழம்பானை | சுப. கோ. நாராயணசாமி | 220 |
| நிகழ்கால விமர்சனப்போக்கு | கே. எஸ். சிவகுமாரன் | 221 |
| பூச்சிறை | நா. வெங்கட்ராமன் | 224 |
| நீயும் நானும் | எம். சி. ஜெயப்ரகாசம் | 224 |

59

# புத்தகங்களை தேர்ந்தெடுத்தல்

நூற்றுக் கணக்கில் மாதம்தோறும், ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் புத்தகங்கள் வெளிவருகிற ஒரு நிலையில் நாம் படிக்க தேர்ந்தெடுக்கவேண்டிய தரமானவை எவை, எவை நமக்கென்று வாங்கிவைத்துக் கொள்ளத் தக்கவை எவை எவை என்று நிதானிப்பது சிரமமான காரியமாகத்தான் இருக்கிறது. பிரயாணத்தின் போது பொழுதுபோக்க ஏதாவது ஒரு புஸ்தகத்தை வாங்குவது என்று வாங்குகிறார்களே அவர்களை சொல்ல வரவில்லை. இலக்கிய ஆர்வம் உள்ளவர்களைப் பற்றித் தான் சொல்கிறோம். ஒரு புத்தகசாலைக்கோ அல்லது புத்தகக் கடைக்கோ போகிற போது, நம் வாசகர்களில் பெரும்பாலோர் இது வரையில் உள்ள நமது தற்கால இலக்கிய சரித்திரம் பற்றிய விஷயஞானத்துடன் தான் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏதோ பத்திரிகைகளில் தாங்கள் பார்த்திருக்கும் படித்திருக்கும் எழுத்தாளர்களை மனதில் வாங்கிக் கொண்டு தங்களுக்கு தெரிந்த அவர்களது புத்தகங்களைத்தான் தேடிப் போகிறார்கள். அவர்கள் இதுவரை கேட்டிராத, பார்த்திராத, படித்திராத புத்தகங்களானாலும் சரி, எழுத்தாளர்கள் ஆனாலும்சரி, அவை பக்கம் அவர்கள் கண் திரும்புவது அபூர்வம். எப்போது அந்த மாதிரி புத்தகங்களை அவர்கள் பார்க்கிறதே இல்லையோ புத்தகக் கடைக்காரர்களும் அவைகளை கடையின் மூலைகளுக்கு அனுப்பிவிட்டு, வாசகர்கள் கேட்பார்கள் என்று தாங்கள் எதிர்பார்க்கும் புத்தகங்களை முன்வைத்து விளம்பரப்படுத்துவதில்தான் அக்கறையாக இருக்கிறார்கள்.

எனவே தெரியவர வேண்டிய ஒரு படைப்பு அல்லது படைப்பாளி உடனே அறியப்படாமலோ அல்லது ரொம்பவும் தாமதித்து அறியப்படவோதான் நேர்கிறது. புத்தகக்கடைகள் மூலம் இது மாதிரி நேர்வதை போகிறது என்று விட்டு விடலாம். அது வியாபாரநோக்கு கொண்டது. எதுக்கு மவுசு இருக்கோ, எதுக்கு மவுசு இருக்கும் என்று படுகிறதோ அதன் பின் போவது இயல்பானது என்று ஒதுக்கி விடலாம். வாசகர்கள் தேவை நாளைக்கு மாறினால் அவர்களும் மாறிவிடக் கூடும். ஆனால் நூல் நிலையங்கள் விஷயம் வேறு. நூல் நிலையத்துக்கு வருகிற வாசகன் எதிர்பார்த்து வருகிறான். நூல் நிலையம் என்றால் நல்ல புத்தகங்கள் சேர்க்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை அவனுக்கு. முதலில்தான் படித்திருக்கிற, பார்த்திருக்கிற, கேள்விப்பட்டிருக்கிற நூல்களை தேடிப்போனாலும் அந்த வரிசை தீர்ந்ததும், புதுசாக ஏதாவது படிக்கும் ஆசையில் பக்கத்து புத்தகங்கள்மீது அவன் விரல்கள் விழத்தான் செய்யும். முன்னர் ஒதுக்கிவிட்ட புத்தகத்தின் பக்கங்களைக்கூட அவன் விரல்கள் புரட்ட ஏற்படும். புத்தக கடைகளில்போல இல்லாமல் அந்த புத்தகங்கள் அவன் கைகளில் இடறிக்கொண்டே இருக்கும். அதுக்கு வாய்ப்பு இருப்பதுதான் நூல் நிலையங்களில் உள்ள ஒரு தனி வசதி. இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அவன் கையில் இருக்கிற நாளை எதிர்பார்த்து இருக்கும் புத்தகங்கள் கொண்டது ஒரு நூல் நிலையம்.

இன்று தமிழகத்தில் நூல் நிலையங்கள் பெருகி வருகிற நிலை. பள்ளிக்கூடங்களில் ஆண்டுதோறும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் நூல் நிலைய கட்டணப் பணத்தைக் கொண்டு புதுப்புது புத்தகங்கள் சேர்க்கப்படுகின்றன பள்ளி நூல் நிலையங்களுக்கு. லோகல் லைப்ரரி 'அதாரிட்டி' என்ற ஒரு நிர்வாக அமைப்பின்கீழ் பொதுஜன வாசக சாலைகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் பல கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்டு நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டபின், ஒவ்வொரு யூனியனிலும் தகவல் அறிவிப்பு நிலையங்களும், சமூக கல்வி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டு அவைகளுக்கு புத்தகங்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்கப்படுகின்றன, மாவட்ட ஆணைக்குழு கிளை நூலகங்கள் இல்லாத இடங்களில் பஞ்சாயத்து போர்டுகள் தங்களுக்கு சிறு நூல் நிலையங்களை நிறுவிக் கொள்கின்றன. கலாசாலைகளில் நூல் நிலையங்கள் இருக்கின்றன.

ஆக நூல் நிலையங்கள் பெருக்கம் தமிழகத்தில் இன்று நாம் காணக்கூடியது. நாம் விரும்பும், வரவேற்கத்தக்க ஒரு வளர்ச்சி எந்த புத்தகமும் ஒருவன் கைக்கு எந்த இடத்திலும் கிடைக்கச் செய்யவேண்டிய ஒரு வாய்ப்பு இருக்கவேண்டியது அவசியம். ஆனால் ஒன்று. 'எந்த புத்தகமும்' என்றால் 'கண்ட கண்ட புத்தகங்கள்' 'குப்பை கூளங்கள்' எல்லாம் அங்கு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற அர்த்தம் இல்லை. 'தரமான எந்த புத்தகமும்' என்பதை மனதில் போட்டுக்கொள்ளவேண்டும், அச்சில் வெளியாகிறவைகளை எல்லாம் வாங்கிக் குவிக்கிற இடம் இல்லை நூல் நிலையம். அவை அனுப்பப்

(இதன் தொடர்ச்சி 223-ம் பக்கம்)

---


**எழுத்து**

சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம முதல்தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப்பிரதி காசு 50. ஆண்டுச் சந்தா. ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதப்பட வேண்டும்.

5-ஆம் ஆண்டு

ஏடு 59

நவம்பர் 63

# புதுப்பார்வையில் பழைய தமிழ்க்கவிதை

## சி. கனகசபாபதி

கவிதையில் படிமத்தைப் பற்றி உலகில்பேசப்பட்டது பதினேழாம் நூற்றுண்டின் மத்தியில்தான். அதற்கும் வெகுகாலத்திற்கு முன்பு கிரேக்க நாட்டின் ஸாபோ, காட்டுலஸ் போன்ற கவிகளின் பாட்டுக்களில் படிமங்கள் இல்லாமல் இல்லை. இருந்தும் கி. பி. 1909-ல் ஹ்யூம், பிளின்ட்டு முதலிய கவிகளே படிமவியலைப் பரப்புவதற்கென்று ஓர் தனியியக்கம் தொடங்கினர்கள். அவர்களுடைய கூட்டத்தில் ஆய்வுக்கு ஷெல்லி, கீட்ஸின் பாட்டுக்களில் வரும் படிமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. காலத்தால் மிகவும் பழைய ஸோபோ அவர்களுடன் புதுவிருந்துக்கு வந்தமர்ந்தாள்,

உலகில் வேறு எங்கோ நடந்தது தமிழுக்கு வராமல் இல்லை. ஆனுல் வருவது எதுவும் ஆண்டுகள் கொஞ்சம் பிந்தியே தமிழுக்கு வந்தடைவது இங்கு என்னமோ இயற்கை. இங்கிருந்து போவதற்கும் இதே விதிதான்.

கவிதையில் படிமத்தைப் பற்றித் தமிழ் நாட்டில் பேசப்படுகிறது இந்த இருபதாம் நூற்றுண்டின் மத்தியில்தான். மிகப் பழைய சங்க காலத்தில் ஔவையார், கபிலர் போன்ற கவிகளின் பாட்டுக்களில் படிமங்கள் இல்லாமல் இல்லை. நமக்குச் சற்று முந்திய பாரதியின் பாட்டுக்களில் சிறந்த படிமங்கள் இருக்கின்றன. இருந்தும் பாரதி காலத்தில் கூடப் படிமவியலைப்பற்றி இலக்கியப்பேச்சு இல்லை. படிமவியலின் இயக்கத் தோற்றம் பாரதிக்குப் பின் இன்று தமிழுக்குப் புதியது என்பதை வரலாற்றில் யாரும் மறுக்கமுடியாது. காலத்தால் மிகவும் பழைய ஔவை நம்முடன் இன்று புதுவிருந்துக்கு வந்தமர்கிருள். கபிலரும் அவரைப் போன்ற கவிகளும் அந்த வரிசையில் வீற்றிருக்கிருர்கள்,

இன்று நம்மிடையே ஒரு பிச்சமூர்த்தி. இந்த நிலாவைச் சுற்றி ஒரு மண்டலம். புதுவானத்தில் பூரிப்பே தோன்றுகிறது. இன்று போல நேற்றிருந்த வானம் இருக்கவில்லை. இன்னும் மிக முந்திய சங்கம் என்னும் ஒலி கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பழைய நாள் வானம் எப்படி இருந்திருக்கும்? அதை அறியவே சிறகடித்துப் பறந்து காலத்தைக் கடந்து பார்க்க ஒரு தனி ஆசை எனக்குள் எழுகிறது.

எந்தப் பாட்டையும் முழுசாக அதன் கட்டமைப்புக்குள் வைத்து அதிலுள்ள கலையின் செயல்திறனை ஆய்வது சரியான நெறி. இப்படி ஒரு படிமத்தின் அமைப்பே ஒரு முழுப் பாட்டாக இருப்பதுண்டு. ஆனுல் ஒரு சொல்லடை, ஒரு உருவகம், ஒரு உவமை ஒரு படிமத்தைப் படைக்கலாம். அல்லது ஒரு சொற்றெடரில், ஒரு தனிப் பத்தியில் படிமம் வழங்கப்படலாம். ஒரு புறநடப்புக்கு இம்மியும் பிசகாமல் கணக்கான நிழல் வேறு; படிமம் வேறு. நம் கற்பனைக்கு மென்று பார்க்கச் சுவை ஊட்டினுல்தான் படிமம். அதாவது படிமம் என்ருல், சொற்களின் சித்திரம் என்பதைவிடச் சொற்களின் உணர்ச்சிச்சித்திரம் என்று இலக்கணம் கூறலாம். இது 'கவிதைப் படிமம்' என்னும் நூலில் சி. டே. லூயிஸ் எடுத்துரைக்கும் கருத்து.

புறநானூற்றில் உறையூர் முதுகண்ணன் சாத்தனர் என்னும் கவிஞர் பாடிய ஒரு பாட்டுக்கு (புறம். 27) ஒளி பாய்ச்சுகிறது நிலாவைப்பற்றியபடிமம். நிலாவைத் தேவனுகக்காண்கிருர் அக்கவிஞர். அவன் அறியாதவர்க்கு ஒரு உண்மையை அறியக்காட்டுவதாக அவர் எண்ணமிடுகிருர். எந்தப்பொருளும் இங்கே தேய்கிறது; பெருகுகிறது. அது மாய்வதும் பிறப்பதும் அதுபோல உண்மை.

"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கள் புத்தேள் திரிதரும் உலகத்து."

இவ்வரிகளில் சொற்களின் உணர்ச்சிச் சித்திரம் உண்டாவதால் படிமம் இருப்பது உண்மை. இருந்தும் நிலாவின் படிமத்தில் நீதிப்படுத்தும் குறிப்பு (Moralizing note) தோய்ந்திருக்கிறது.

கலித்தொகையில் பாலைநிலத்தின் மரங்களைப் பற்றிக் கீழ்வரும் வரிகள் ஒரு பாட்டில் (பாலைக்கலி. 10) வருகின்றன.

"வறியவன் இளமைபோல் வாடிய சினைய வாய்,
சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு நிழல்
இன்றி
யார் கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான்
இறுதிபோல்
வேரொடும் மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்."

பாலை நிலமரங்கள் ஏழைமகனின் இளமைபோல் வாடிய கிளைகளுடன், சின்ன புத்திக்காரனிடம் செல்வம் போலச் சேர்ந்தவருக்கு நிழலே கொடுக்காமல், யாரிடத்திலும் விரோதம் கொண்டு புகழைக் கெடுத்துக் கொள்பவனுடைய முடிவுபோல வேரோடு வெம்பிப் போயிருக்கின்றன. காரணம் விரிந்த கதிர்களையுடைய சூரியன் அம்மரங்களை வருத்தி வாட்டுவது. இவ்வரிகளில் பாலைமரங்களைப் பற்றிய படிமத்தில் நீதி என்பது உணர்ச்சியாகும் மூலப் பொருளோடு, இதற்குமுன் நாம் கண்ட நிலாவைப்பற்றிய படிமத்தில் உள்ளதைக் காட்டிலும், ஒன்றி இணைந்திருக்கிறது.

கணியன் பூங்குன்றனர் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கிப் பாடும் புறநானூற்றுப் பாட்டின் (புறம். 192) இடையே இப்படி ஒரு படிமம் தோன்றுகிறது.

"வானம் தண்துளி தலைஇ ஆனது
கல்பொருது இரங்கும் மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழுப் படூஉம்"

வானம் குளிர்ந்த துளியைப் பெய்வதால், குறையாது கல்லை அலைக்கும் ஓசையிட்டுவரும் பெரிய ஆற்றின் நீர் செல்லும் வழியிலேயே போகிறது தெப்பக்கட்டை. அது போல உயிர் ஊழ்வினையின் வழியே செல்லுகிறது. இவ்வாறு ஊழ்வினையைப் பற்றிய நீதிக் கருத்தைச் சொல்லுவதே கவிஞரின் நோக்கம் இங்கு. அக்கருத்தை உணர்ச்சிப் பாங்காக, முன்சொன்னதைக் காட்டிலும் நெருக்கமாக, ஒன்றி இணைத்து வெளிப்படுத்துகிறது ஆற்றில் செல்லும் மிதவையைப் பற்றிய படிமம்.

## 2

மேலே கண்டபடி பாட்டுக்களின் இடையே நின்று ஒளிபாய்ச்சும் படிமங்கள் ஒருவகை. இந்த வகைக்கு எடுத்துக் காட்டாக மேலே கொடுத்தவை மிகவும் எளிதானவை; முறையான படிப்பில் ஓரளவு அறிமுகமாகி இருக்கின்றன. இனி அடுத்து, ஒரே படிமத்தின் அமைப்பையே கொண்ட ஒரு முழுப்பாட்டாக ஆய்வுக்கு எடுக்கலாம்; புதிய அறிமுகம் காணலாம்.

புதுநானூற்றில் பெரும்பதுமனர் என்னும் கவிஞர் பறவைகளையும் இரந்துண்டு வாழ்வோரையும் ஒப்பிட்டு ஒரு பாட்டில் (புறம். 199) பாடியிருக்கிறார். கடவுள் வீற்றிருக்கும் ஒரு ஆலமரத்தில் பெரிய கொம்புகளில் பல பழங்கள் பழுத்திருக்கின்றன. நேற்றும் ஆலம் பழங்களைத்தின்றோம் என்று நினையாது பின்னும் அங்குப் போவதை நிறுத்தாது களிப்பில் ஓசையிடுகின்றன பறவைகள். அந்தப் பறவைகளைப் போன்றவர் இரந்துண்டு வாழ்வோர். இந்த ஒப்புமையைப் பாட்டிலேயே பார்ப்போம்,

"கடவுள் ஆலத்துத் தடவுச்சினைப் பல்பழம்
நெருநல் உண்டனம் என்னாது பின்னும்
செலவு ஆனாவே கலிகொள் புள்ளினம்
அனையர் வாழியோ இரவலர்."

இந்தப்பகுதிஅளவில் பார்த்தால் பாட்டிலுள்ள பறவைப்படிமத்தின் சிறப்பு உயர்வாகத் தெரிகிறது. யாசித்துவாழும்புலவர் முதலான கலைஞர்களின் வாழ்வைஇப் படிமம் மனத்திரையில் ஒரு படமாக உயர்த்திக் காட்டுகிறது. ஆனால் பாட்டின் கருப்பொருளைப் பெரும்பதுமனர் மேலும் வளர்த்துக்கொண்டு போகிறார்.

இரந்துண்டு வாழ்வோரைக் காப்பதற்காக ஏற்றுக் கொள்ளும் பெருந்தகைச் செல்வர்களின் செல்வமே அந்த இரந்துண்டு வாழ்வோரின் செல்வமாகும். பெருந்தகைச் செல்வர்களுடைய வறுமையே அந்த இரந்துண்டு வாழ்வோருடைய வறுமையாகும். இவ்வாறு நீதியாக முடித்திருக்கிறார் கவிஞர் தம் பாட்டை.

"அனையர் வாழியோ இரவலர் அவரைப்
புரவெதிர் கொள்ளும் பெருஞ்செய் ஆடவர்
உடைமை ஆகும் அவர் உடைமை
அவர் இன்மை ஆகும் அவர் இன்மையே."

இப்பாட்டின் இரண்டு பகுதிகளையும் ஒன்று சேரவைத்துக் கண்டால் பறவைப் படிமம் கருத்தளவில் சிறுத்துப் போய் விடுவதையும், கவிஞரின் நீதி, உணர்ச்சிப் பாங்கை மட்டுப்படுத்தி அழுத்துவதையும் உணரலாம். என்றாலும் இது ஒரே ஒரு படிமம் எழுந்துநிற்கும் கட்டமைப்பில் முழுப்பாட்டு. இதில் நீதிப்படுத்தும் குறிப்பே முடிவுப் பொருளாக மனத்தில் தோன்றுகிறது.

பறவையைப் பற்றிப் படிமம் காட்டி ஆனால் நீதிப்படுத்துவதையே தலைகாட்ட விடாமல் செய்து பழைய தமிழ்க் கவிஞர்கள் பாடியும் இருக்கிறார்கள். உதாரணத்திற்குக் குறுந்தொகையிலிருந்து தாமோதரன் என்னும் பெயரமைந்த கவிஞர் பாடியதை (குறு. 92) இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாலைப்பொழுதும் ஆகிவிட்டது. காதலன் இன்னும் வீடு திரும்பவில்லை. காதலி வீட்டில் இருந்த வண்ணம் பொழுது கண்டு புலம்பிச் சொல்லுகிறாள். அது அவளுடைய காதல் மிகுந்த துன்பம் படர்ந்த தனிமொழி. "சூரியன் மறைந்த அகன்ற இடத்தையுடைய வானம். அந்த வானத்தில் வருந்தத்தக்கது. அந்த வளைந்த சிறகையுடைய பறவை. தான் தங்குதல் பொருந்த, உயர்ந்த வழிக்குப் பக்கத்திலே உள்ளது கடம்பமரம் அந்த மரத்திலுள்ள தன் குஞ்சின் வாயின் உள்ளே செருகும் பொருட்டு இரையைத் தேடிக் கொண்டதால் அப்பறவை விரைந்து செல்கிறது."! பாட்டின் பொருள் இது. பொருளை அறிந்தால் மட்டும் போதாது. பாட்டின் போக்கோடு செல்லுவது அவசியம்.

"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து-
அளிய தாமே--கொடுஞ்சிறைப் பறவை,
இறை உற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமால் செலவே"

(கொடும்--வளைந்த, இறை-தங்குதல். செரீஇய-செருகும் பொருட்டு.)

இப்பாட்டில் பறவையைப் பற்றியே சேதி இருக்கிறது. பாட்டு முழுமைக்கும் பறவையின் ஒரு 'படிமமே அழகாகத் தோன்றுகிறது. நீதிப்படுத்துவதே இல்லாமல் படிமத்தாலேயே உருப்பெற்றிருக்கிறது பாட்டு. 'அளிய தாமே' என்னும் ஒரு சொல் 'விரையுமால் செலவே' என்னும் கடைசித் தொடரோடு பொருந்தி நிற்கிறது. இச்சொல் ஒன்று மட்டுமே இப்படிமத்தில் ஒரு உணர்ச்சிப் பாங்கான சொல்(a sensuous word in the image) என்று காணலாம். இச் சொல்லே பாட்டுக்கு உள்ளிருந்து, பரிமாற்றம்(association) ஏற்படுத்துகிறது. பரிமாற்றம் உண்டாக்கும் குணம் இன்றைக்குப் புதிய படிமவியல் பாட்டை முத்திரையிட்டுக் காட்டக் கூடியது. இதிலுள்ள பரிமாற்றம் என்ன என்பதை ஆழ்ந்து நோக்க உணரலாம். தனிமொழி கூறும் தலைவி, அம் மாலைப்பொழுதில் அவள் பார்க்கும் பறவை தன் குடும்பத்தைக் காக்கக் கருதி விரைந்து செல்வதுபோல, தன் காதலன் இல்லறம் செய்வதற்குக் கருதவில்லையே என்று மிக்க துன்பம்கொண்டு புலம்புகிறாள். இதையே பரிமாற்றமாக நாம் பறவைப் படிமத்திலிருந்து உணர்கிறோம்.

புதுப் பார்வையில் இப்பாட்டை இவ்வாறு பார்த்தால் இதிலுள்ள பறவைப் படிமம் உணர்வு தோய்ந்ததால் ஒரு மனநிலையைப் படைப்பதாக (emotional, or of mood) உள்ளது என்று சொல்லலாம். வேறு குறியீடு, அல்லது உருவகம், அல்லது உவமை எதுவும் பெறாவிட்டாலும், பரிமாற்றம் ஒன்று மாத்திரம் பெற்று, இன்றைய புதுமைக்கு அருகே கொலுவிருக்கத் தக்கதாக இப்பாட்டு விளங்குகிறது.

## 3

படிமவகைகளில் காட்சியொளிப் படிமம் (Visual image) ஒருவகை. கவிஞன் மனத்தில் கண்ட காட்சியைவாசகனும்காணும்படிஅமைகிறதுஎதுவோ அதுவே காட்சி யொளிப் படிமம். இதற்கு ஔவையார் பாடிப் புறநானூற்றில் உள்ள இரண்டு பாட்டுக்களை உதாரணமாகக் காண்போம்,

சங்க கால ஔவையார் அதிமான் என்னும் சிற்றரசனைப் பல சந்தர்ப்பங்களில் பாடியிருப்பவர். ஒரு சமயம் அதிகமான் எப்படிப் புலவர்களுக்கு இனியனாகத் தோன்றுவான் என்பதையும் பகைவர்களுக்கு அவன் கொடியவனாக எப்படி இருப்பான் என்பதையும் ஒரு பாட்டில் (புறம். 95) புலப்படுத்தியிருக்கிறார்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெருமை எமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே."

ஊரிலுள்ள சிறுபிள்ளைகள், தனது வெள்ளை நிறக் கொம்பைக் கழுவும் காரணமாக நீர்த்துறையில் வந்து நீர் மூழ்குகிறது பெரிய ஆண் யானை. அது அச்சிறுவர்களுக்கு எவ்வாறு எளிதாய் இனிதாய் இருக்குமோ அவ்வாறு புலவர்களுக்கு இனியன் அதிகமான். அந்த யானையின் நெருங்கமுடியாத மதம்கொண்ட நிலைமை எவ்வாறு கொடியதோ அவ்வாறு பகைவர்களுக்குக் கொடியவன் அதிகமான். யானையை வைத்தே தாம் எண்ணிய இரண்டு கருத்துக்களையும் ஒளவையார் இங்ஙனம் கூறி முடிப்பது ஒரு சிறந்த உத்தியாக உள்ளது.

இதில் யானையைப் பற்றிய படிமம் சாதாரணமானது. இருந்தும், சிறுபிள்ளைபோல அதிகமானிடம் ஈடுபட்ட மனநிலையில் ஒளவையார் பாடும்போது, அதற்கேற்பவே அதாவது அந்த மனநிலைக்குப் பொருத்தமாகவே யானையின் படிமம் பாட்டில் கற்பனை வடிவம் அடைந்திருக்கிறது. இதன் காட்சியொளித்தன்மை சந்தேகமில்லாமல் மனத்தில் படுவதாகத் தோன்றுகிறது.

மற்றொரு சமயம் ஒளவையார் அதிகமானின் தூதாகத் தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமானிடம் செல்ல நேர்ந்தது. தொண்டைமான் அதிகமானிடம் பகை கொண்டவன். தன் படைப்பெருமையை ஒளவையாருக்குக் காட்ட எண்ணி அவரைத் தனது படைக்கலக்கொட்டிலுக்கு அழைத்துப்போய் அங்கிருந்த போர் ஆயுதங்களைக் காட்டினான். ஒளவையார் அவற்றைப் பார்த்துப் பாடியதாக உள்ள ஒரு பாட்டு (புறம். 95) நமக்குக் கிடைத்திருக்கிறது.

தொண்டைமானின் படைக்கலங்கள் மயில்தோகை அணிந்து மாலை சூட்டப்பட்டு, திரண்ட வலிய காம்புகள் அழகு செய்யப்பட்டு, நெய் பூசப்பட்டு அவனுடைய காவலையுடைய அரண்மனையில் வைக்கப்பட்டிருந்தனவாம். அதிகமானுடைய வேலாயுதங்களாகிய அவை, பகைவரைக் குத்தியதால் நுனி சிதைந்து, கொல்லன் பட்டறையில் எந்நாளும் கிடந்தனவாம். இவ்விரண்டு காட்சிகளையும் பாட்டிலேயே காண்போம்.

"இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியன்நகர் அவ்வே; அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணலெம் கோமான் வைந்நுதி வேலே.'

(இவ்வே – இவை. அவ்வே—அவை. நோன்காழ்—காம்பு. நுதி – நுனி.)

தொண்டைமான் அடிக்கடி போர் செய்து பழகாதவன். எனவே அவனுடைய படைக்கலங்கள் சிதையாமல் சுத்தமாக இருந்தன. அதிகமான அடிக்கடி போர் செய்யப் படைக்கலங்களை எடுத்திருப்பதால் அவை சிதைந்து செப்பம் செய்யும் பொருட்டாகவே கொல்லன் பட்டறையில் கிடந்தன. இப்படித் தொண்டைமானைப் புகழ்வதுபோலப் பழித்தும், அதிகமானைப் பழிப்பது போலப் புகழ்ந்தும் பாடியிருக்கிறார் ஒளவையார்.

இப்பாட்டின் பொருளைப் பற்றி ஒரு சந்தேகம் எழக்கூடும். மனிதாபிமானம் என்று எதையோ புரிந்து கொண்டு, இங்கே இப்படிப் போர்த்தொழில் பற்றி ஒளவையார் பாடலாமா என்று கேட்கலாம். ஒளவையார் போரின் கொடுமைகளை ஆனந்தம் மேலிட்டு இங்கே வருணிக்கவில்லை. வீர ஆண்மை, வெட்கத்திற்கு நாணுதல் என்னும் இப்பண்புகளையே அவர் பாடுகிறார். ஒளவையாருக்குக் கவிபாடக் கிடைத்த பொருள் இன்று நமக்குக் கிடைக்காதிருக்கலாம். நம்முடைய புறநடப்புக்கு அது அன்னியமாகப் படலாம். இதற்காக அந்தப் பொருளின்மீது மனவெறுப்பும் புறக்கணிப்பும் கொள்வது பொருந்தாது. கவிதைக்குப் பொருள் அவ்வக்காலப் புறநடப்பில் கிடைக்கக் கூடியது. எந்தப் புறநடப்பிலிருந்தும் பொதுவுண்மையைக் குறிப்பாற்றலாக, பொருள் நிச்சயமற்ற நிலையில் அழகுணர்ச்சியோடு தோற்றவைப்பவனே திறன்மிக்க கலைஞன். இந்த நோக்கில் ஒளவையாரின் இப்பாட்டின் பொருள் ஆய்வைப் பார்க்கும்போது, மனவிருப்பம் தூண்டப்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

புதுப்பார்வையில் பொருள் ஆய்வு செய்வது ஒருபுறம் இருக்கட்டும். இப்பாட்டின் உருவம் பற்றிய ஆய்வுக்கு வருவோம்.

முதலில் இப்பாட்டில் சொல்லப்படும் வேற்கருவிகளைப் பற்றிய படிமம் காட்சியொளி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கதமாகப் பாடும் கருப்பொருளின் சிறப்பும் இது கொண்டு திகழ்கிறது

இப்பாட்டில் வரிக்குவரி நான்கு சீர்கள் வரும் ஆசிரியப்பாவின் இடையே இரண்டுவரிகளில் மட்டும் மூவசைச்சீர்கள் வந்திருக்கின்றன.

"உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடன்உண்ணும்."

கடைசிக்கு முந்திய வரி ஈரசைச்சீர்கள் மூன்றுகொண்டு 'இல்லோர் ஒக்கல் தலைவன்' என்று அமைந்துள்ளது. இதில் புதுமை இல்லை. ஆனால் மூவசைச் சீர்களுடன் இரண்டு வரிகள் வஞ்சிப்பாவில்போல இதில் வருவது புதிய மரபு; பழைய மரபின் ஒரு வளர்ச்சி நிலை. வேற்கருவிகளைப் பற்றிய படிமங்களைத் துல்லியமாகத் தனியாகப் பிரித்துக்காட்ட ஒரு வடிவமும் ஒலிநயமும் கொடுத்து அதிகமானைச் சொல்லுவதற்குமட்டும் தனித்துத் தோன்றுமாறு வேறு வடிவமும் ஒலிநயமும் கொடுத்துள்ளார் ஒளவையார். இன்றைக்குப் படிமவியல் பாட்டுக்கு இலகுசெய்யுள் யாப்பு பொருந்தி அமைகிறதாகச் சோதனையில் புதுக் கவிஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஒளவையாரின் 'இவ்வே பீலி அணிந்து' பாட்டின் யாப்பு இலகு செய்யுள் பாணிக்கு ஒருவகையில் ஒத்துவருவதாகத் தோன்றுகிறது.

படிமவியலின் கொள்கைகளுக்கும் ஒளவையாரின் இப்பாட்டு பொருந்தக்கூடியதாகத் தோன்றுகிறது. முதன்முதலில் படிமவியல் இயக்கம் தோற்றுவித்த ஆங்கில அமெரிக்கக் கவிஞர்கள் நான்கு கொள்கைகளை வகுத்தார்கள். பொருளை நேர்முகமாகக் கையாளுதல், சொல் சிக்கனம், படிம இலக்கணம் உணர்ந்து பாடுதல், பேச்சு நடை ஒலிநயம் என்பவை அந்நான்கு கொள்கைகள். எடுத்த எடுப்பில் 'இவ்வே, என நேர்முகமாகத் தொடங்கினார் ஒளவையார். தமது அங்கதப் பொருளை விளம்பரமாக்காமல் செட்டாகச் சொல்லை அமைத்திருக்கிறார். இதில் படிமச் செழுமைக்கும் குறைவில்லை. 'இவை இப்படி, அவை அப்படி' எனப் பாடுவதில் பேச்சு நடையின் ஒலிநயமே கேட்கிறோம்.

பழைய தமிழ்க் கவிதை படைக்கும் புதுவிருந்து மனத்திற்கு எவ்வளவு அழகின்பமும் ஆற்றலும் தருகிறது!

# நானும் தமிழும்

சகுந்தலா பத்மனபன்

தமிழ் என் தாய்மொழி—அதை எப்படி நான் கற்றுக்கொண்டேன் என்ற தனி ஆராய்ச்சியில் இறங்கத் துணிந்து விட்டேன்.

என்? உனக்கு வேறு வேலையில்லையா? போது போகாமல் உனக்கிருக்கும் ஆத்திரத்தைத் தமிழ் பேரில் தீர்ப்பானேன்.''

வெறும் ஆத்திரம் மட்டுமில்லை தனி ஸ்வாரஸ் யம் கூட ஏற்பட்டிருக்கு. சரிதான்! வேறு வினையே வேண்டாம்—படித்தவரும், படமெடுப்பவரும் கலை, இலக்கியம் என்ற சாக்கில் உருவாக்கும் கற்பனையும், கவிதையும் போருது நீவேறு, இந்தப் புனருத்தாரணத்தில் இறங்கிவிட்டாயக்ாகும்.

“அதே கட்டுரைகள் தான் என்னையும் தூண்டி விட்டன. போருக் குறைக்கு அந்த நாளில் சின்ன வயதில் அரை குறையாய்ப் படித்து வெக்கமில்லாமல் தமிழ் பரீக்ஷையில் குட்டிக்கரணம் போட்ட பாவத்துக்குப் பரிகாரம் தேடவேண்டியே இந்த ஆராய்ச்சிப் பிரயாணத்தைத் தொடங்கினேன்.''

தமிழ் என்ற உடன் அப்படி ஒரு சக்தி உன்னிடம் உண்டானல் வேறு ஏதாவது ஒரு விஷயத்தில் காண்பியேன். கதை, நாடகம், பாட்டு, நடை, பேச்சு......

கொஞ்சம் பொறுங்கள்—கதை எத்தனையோ இருக்கு. பார்க்குமெடமில்லாம், நாடகம். பாட்டும் நடையும் எங்கு பார்த்தாலும் ரொம்பி வழிகிறது. ஆனல் உயிர்ப் பேச்சுக்கும், உயர்வு எழுத்துக்கும் என்ன சம்பந்தம்? கையில் பேனு எடுத்தாலே, எதுகை, மோனை, வாய்ப்பு, விஸ்தரிப்பு என்ற வலிப்புகள் பிடித்து கையையும் மனத்தையும் இழுக்கின்றன—படிக்கிருேம்—இலக்கியம் படிக்கிருேம்—வாழ்க்கையைச் சித்தரிக்கும் இலக்கியத்தைப் படிக்கிருேம் என்று கம்பீரத்துடன் குரலை நிமிர்த்துா் நம் வாசகர்களை நான் எப்படி நேரிடைப் பேச்சினல் அழைக்க முடியும்?

போனு வந்தா, செஞ்சா போச்சு என்று பேசுவதில் உரமிருக்கும். ஆனல் இவையெல்லாம் எழுத்தில் பிழையாய் உறுத்தும்—நடையில் வேனுமானல் ஒரு அலட்சிய அமைப்பும், எளிதான விசையும் காண்பிக்கலாம்—ஆனல் மருவையும், மாசையும், உயிராக்கும் என்ற துணிவுக்காகக்கூட அனுமதிக்க முடியாதே!—

ராஜா மாதிரி நடிக்க, கிரீடம், பட்டு வஸ்திரம், முத்து மாலை எல்லாம் தேவை—அதுபோல இலக்கியம் என்ருல், கோர்வை, விளம்பரம், இவையெல்லாம் முக்யம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனல் கொச்சைப் பேச்சுக்கும் ஆங்கில இரவல்களுக்கும் இலக்கியத்தில் என்ன மருந்தோ, பரிகாரமோ இருக்குஎன்பதைத்தான் ஆராய விரும்புகிறேன். எளிதில் விலையாகும், பொது மக்களால் பாராட்டப்படும் நவீனங்களுக்கும் கண்யமான இலக்கிய ரஸனைக்கும் அனுபவத்துக்கும் ஒரு மனஸ்தாபம், உறவு—ரத்து இருப்பது அவசியமா? நல்லதா என்றுதான் கேட்கிறேன்?

இதற்குக் காரணம், தமிழின் குற்றமல்ல—நம் மக்களின் சங்கடம் ஒரு துறையில் மட்டுமில்லை—அரசியல், கற்பனை, இலக்கிய விசாரணை, கலாதார அனுபவம், இவை எல்லாவற்றிலும், ஒரு கலக்கம் ஏற்பட்டிருப்பதால்தான். இது குழறுவதாலே தான் ஒரு விதமான தீர்ப்பும் காணுமல் இருக்கோம்—உலகம் வேறு நம்மை இந்த சமயத்தில் உற்று நோக்குகிறது. பிரசவ வேதனைப்படும் பெண், அக்கம்பக்கத்திலிருப்பவர் கேலிக்குப் பயந்து வாய்விட்டுக் கத்தாமல், முக்கி, முனகுவது போலிருக்கு, நம் தற்காலத்திய இலக்கிய அமைப்புக்கள். இந்த சந்தர்ப்பத்தில், புதுமை, சக்தி, புலமை. புரட்சி என்று வெறும் முனகலுக்கு நாம் பேர் வைக்கப்படாது. பிறக்கும் குழந்தை வீரிட்டால் அதைத்தான் புதுக் குரல் என்று சொல்லவேண்டும்.

அதுமட்டும் காத்திருக்க யாருக்குப் பொறுமை. இதிலேயே, இப்பொழுதே ஏதாவது ஒரு மறுமலர்ச்சியோ மினிர்வையோ கண்டுபிடித்துவிட்டால், ஒரு திருப்தி ஏற்படும். மேலும் தமிழ் என்ற பேரில் கோவில், குளம், கட்டுரை, காவியம் எல்லாவற்றிலும் ஏதாவது ஒரு நாகரீகச் சின்னத்தைக் காட்டவேண்டும்; புது வர்ணம், புதுக் கலையிலும் (வெள்ளையர் விஞ்ஞான சகாயத்தாலும்) நம்மவர் வேர்வைப் பணியாலும் இந்த இருபதாம் நூற்ருண்டில் நம் நாட்டில்ஒரு புது இயக்கத்தை நாம் துவக்கவேண்டாமா? துவக்கின விஷயத்தை நாலு பேரறிய டமாரமடிக்க வேண்டாமா?

தம்பி, சற்றுப்பொறு—பேச்சு வாயிலே, மூச்சு மூக்கிலே—இருபதாம் நூற்ருண்டு என்ருல் என்ன இரண்டாயிரம்வருஷத்து கணக்கு-குட்டிச் சுவரிடம் அதன் வயதைச்சொல்லிஎன்னபிரயோஜனம்? கேட்ட அதிர்ச்சியில் இன்னும் சற்று இடிந்து விழும். நம்மைப் பொறுத்த மட்டில் நூற்ருண்டுகளுக்குக் கணக்கேகிடையாது.சரித்திரம் வெறும்காயிதக்கட்டு மனுஷ அனுபவம் மலிந்து குப்பைபோல மேடான காலம். அப்போ ஆராய்ச்சிக்குப் பயனில்லையா?

நடந்துவிட்ட காரியத்தை ஏன் கிளறப்பார்க்கிருய்? சரிதான், திடுதிப்பென்று என்னத்தைச் சாகிக்கமுடியும். குளத்தில் குதித்தால்தானே நீந்தத்தெரியும். தாகத்துக்குக் குடிக்கக் கையிலே ஏந்தினல் போறுமே!

அதுதான் நம்முடைய குற்றம். வயிற்றுப் பிழைப்பிற்கு பீடிக்கப்பட்டிருக்கிருேம். கேவலம் உலகத்தின் கண்ணைக் கவரவேண்டி உடம்பை அஷ்டகோணலாய் வளைக்கிருேம்—அதை மெச்சுபவர்களின் தரத்தையறியாமல் இது மகிமை, புகழ் என்று கொண்டாடுகிருேம். இரண்டும் இல்லை. வெளியாரிடம் மண்டியிட்டு இலவசப் பால், இரவல் மூளை, சலுகைக் கடன் இவைகளை வாங்குவதில் குறைவில்லை.

அப்போ தமிழ் ஆராய்ச்சி...இன்னும் ஐம்பதுவருஷம் கழித்துத் தொடங்குவோம் அந்த வேலையை—சினிமா மறைந்துவிடும். நம்மவர் வெளியூர், வெளிநாடு என்று வேறு ருசி அலுத்து, நம்மூர் தேடித் திரும்பி வருவார், தாயை விட்டுப் பிரிந்த குழந்தை மீண்டும் வருவதுபோல. உலக வாடையில் பக்குவப்பட்ட, உலக நோக்கங்களில் பழகிய அவர்களிடந்தான் பெயர்த்து நட்ட பதியனின் வலுவிருக்கும்.

நீயும் நானுமிருக்க மாட்டோம். ஆனல்... தமிழிருக்கும்—ஐயா—கவலைப்படாதீர், தமிழிருக்கும்!

## சிறுகதை

# சத்யாக்ரகி

## சி. சு. செல்லப்பா

மதுரை எனக்கு புதுசு இல்லை. கருங்கல், சரளை கப்பி ரோடாக இருந்தபோது குரோம்தோல் செருப்புகூட-அப்போதெல்லாம் ரப்பர், டையர். கிரேப்ஸோல் தெரியாது, போட்டுக்காமல் சச்சதுரமான ஆடி, சித்திரை, ஆவணி, மாசி வெளிவீதி மண்ணெல்லாம் மிதிச்சுப் போயிருக்கிற பாதங்கள்தான் என்னது. ஆனால் இன்றைக்கு நடந்துபோகிறபோது ஒரு புதுசான உணர்வு. சிங்கப்பூர் செருப்புலே மண் ஒட்டவே இல்லை. மண் இருந்தால்தானே ஒட்ட? சந்து பொந்தெல்லாம் கூட தார் மெழுகி ஆன அப்புறம் மண் ஏது தெருவிலே? சுத்திப்போட முச்சந்தி மண் வேணுமானால் தார் ரோடை கிள்ளி அடியிலே இருக்கா என்று பார்க்கணும். வெடிக்கிற கொப்புளத்துக்கு சமயத்துக்கு குழைத்துப்போடவீட்டு அறை செங்கல் சுவர் ஓரத்து செம்மண்ணுக்காக சிமிண்டு தளமும் காங்கிரீட் சுவரும் ஆன வீடுகளிலே பிருண்டிப் பார்த்தால் நகம் தான்தேயும். மண்ணை மறைத்து மேலே எதெதையோபோட்டு கெட்டித்து மூடித்தேய்த்து வழவழப்பாக்கி அது மேலே அழகுநடை போடுகிற காலம் இது.

மண்ணை மறைத்துவிட்டால் மண்வளம் மங்கிவிடாது. உள்ளூர புகைச்சலாக என்றைக்காவது தன்னை வெளிக்காட்டிக்க குமுறிக்கொண்டுதான் இருக்கும். அந்த குமுறலைத்தான் நான் எனக்குள் உணர்ந்துகொண்டு கால் போனபோக்கில், குறிப்பு இல்லாமல் நடந்துகொண்டிருந்தேன். ஒரு வேளை நானும் அந்த மண் மாதிரிதானோ? மேலே நினைப்பை தொடர்வதுக்குள் எதிரே தோன்றின காட்சி காலை தடைப்படுத்தினதோடு மனசையும் சேர்த்துக்கொண்டது. எனக்கு முன் முடிந்த அந்த குறுக்குத்தெருவை மறித்து மெயின் ரோட்டுக்குள் நுழைவதை தடுத்து வரிசையிட்டு நின்றது கூட்டம். எதுக்காக என்று கேட்டுக்கொள்ளப் போனவன் சட்டென அசட்டுத்தனத்தை உணர்ந்து—நேர் எதிரே உயரே தெருவில் குறுக்கே கட்டி இருந்த தோரணம் சுட்டிக்காட்ட—சரிதான் சுதந்திரதின ஊர்வலம் என்று எனக்குள் முணுமுணுத்துக் கொண்டேன். காலையிலிருந்து ஆகஸ்ட் பதினைந்து ஞாபகம் இருந்தும் நான் அதைப் பற்றி சிந்தித்ததாகவே நினைவு இல்லை. நான்தான் மண்ணை மறைத்த தார் பூச்சாக வேறு எந்த உலகத்திலோ இருந்தேனே.

வரிசையை கீறிக்கொண்டு நான் மெயின் ரோடுக்கு கூடியிருக்கலாம் தான். போகிற வருகிற இன்றைய புற்றீசல் அரசியல் ஊர்வலங்களை எல்லாம் வேடிக்கை பார்க்கிற வயதையும் தாண்டிவிட்டேன். மனப்போக்கும் இல்லை. இருந்தாலும் ஏதோ யதேச்சையாக குறுக்கிட்டதை பார்க்கலாமே என்று முன் வரிசைகளுக்குப்பின் நின்றுவிட்டேன். ப்க்கத்தில் ஒரு குரல் இது மாணவர் ஊர்வலம்; என். சி. சி. 'மார்ச் பாஸ்ட்' என்று யாருக்கோ சொல்லிக் கொண்டிருந்தது எனக்கும் தகவலாக இருந்தது. நான் இதுவரை பார்த்திராத ஊர்வலமாதிரி இது. ஏன், நம் நாட்டிலேயே இதுவரை நடந்திராத ஊர்வலமாதிரியும் அது. கட்டாய ராணுவ சேவை பயிற்சி கலாசாலைகளில் அமுலுக்கு வந்த இந்த ஆண்டுதானே இது முன் மாதிரி. இந்த நினைப்பில் ஊர்வலத்தின்மீது அக்கறை ஏற்பட்டது எனக்கு. இன்றைய நம் மாணவன் துப்பாக்கி ஏந்தி லெ..ப்ட் ரைட் போட்டு காக்கி உடையில் நெஞ்சுமுன் தூக்க அணிவகுத்துப் போகிறான்! இந்த எண்ணத்தில் புல்லரிப்பு கூட ஏற்பட்டது எனக்கு. பார்ப்போமே. எட்டி முன் பார்த்தேன். அணிவகுப்பு கிட்டத்தில் வருகிற சமிக்ஞையே இல்லை. இருந்தாலும் பார்த்து விட்டே போவோமே.

போய்க்கொண்டே இருந்தால் நினைப்பு பராக்கு காட்டப்பட்டு திசை மாற இடம் உண்டு. நின்று, அதுவும் சாத்து நிற்கிற நிலையில் நிதானிக்க இடம் உண்டு. நான் எப்போதுமே அசைபோடுகிற மாடு. புதுசு புதுசாக ஆகாரம் தேடாத மனம். பழசைநினைத்து வெறும் வாயை மென்றால்கூட பசி போய்விடுகிறமாதிரி. பிரமையோ என்னவோ. உண்மை அது. இல்லாது போனால் சரியாக முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதே இடத்தில் வந்த ஊர்வலத்தையும் நிகழ்ந்ததையும் பற்றிய ஞாபகம் எப்படி மின்னிட்டிருக்கும். அன்று நடந்தது—கொட்டி வெளியே வருகிற மாதிரி எனக்குள்ளே இருந்து கிளம்பியது. எனக்குள் பரபரப்பு. எனக்குத் தெரிந்த அந்த நாளைய ஒருவர் யாராவது கிடைத்தால் பேசிக்கலாமே என்று சுற்றுமுற்றும் பார்த்தேன், எனக்குத் தெரிந்த முகம் எதுவும் இல்லை சுற்றி. முப்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன் அதே இடத்தில் இருந்திருக்க முடியும் என்று நான் அனுமானிக்கக் கூட இடம் இல்லாதபடி ஒரு பருவத்தவர்கள்தான் அங்கே நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர்கள் என்று பட்டது. முப்பத்தி இரண்டு வருஷ காலம். ஒரு தலை முறையே மாறிப் போன கால அளவு. முன் தலை முறை கிழண்டு போயிருக்கும். அதுக்கு அங்கு வர தெம்பிருக்காது. இருந்தாலும் வர மனநிலை இருந்திருக்காது. நடுத்தலைமுறையோ எங்கெங்கோ இரைதேடிப் பறந்துபோயிருக்கும். அங்கே இருக்காது. வளரும் பரம்பரையோ அதை பார்த்தே இராத, பார்த்திருந்தாலும் மனதில் பதியும் பக்குவம் பெற்றிராத, கேட்டே இராத, கேட்டிருந்தாலும் தன் உணர்வோட்டத்தில் வாங்கி நிறுத்திக்கொள்ளாத அல்லது கதையாக கேட்டுவிட்டு அடுத்த விநாடி

சினிமா கிரிக்கெட் பற்றி பேசப்போகிற பிஞ்சுப் பருவம். ஆகவே என்னைப்போல இன்னொருவர் அந்த இடத்தில் இருக்கமுடியும் என்று எனக்கு தோன்றவே இல்லை. ஆக, அத்தனை பேர் வரிசையிட்டு நின்றிருந்தாலும் நான் தனியே நிற்பதான உணர்ச்சிதான் எனக்கு. யாராவது புதுசான ஒருவரை பேச்சுக்கு இழுத்து பழசை எல்லாம் ஞாபகப்படுத்திக்கலாம் என்று ஒரு சமயம் தோன்றியது. உடனே இந்த ஸ்கூட்டர் டெர்வின் தலைமுறை அதை எப்படி ஏற்குமோ, பழங்கதை, பத்தாம் பசலி என்று தள்ளிவிடுமோ, என்ற பயமும் ஏற்பட்டது. என்னைப்போல் பெரியவர் சாம்பமூர்த்தி அத்தானிடம் அவர் காலத்து அல்லது அவர் கேள்விப்பட்ட அவருக்கு முன் காலத்து தகவல்களை விரும்பி பொறுமையுடன் கேட்க எத்தனைபேருக்கு அதிலும் அந்த கூட்டத்தில் யாருக்கு இருக்கும் என்று நான் எதிர்பார்க்க முடியும்?

எனவே மவுனமாக நின்று கொண்டிருந்தேன், விழிகள் மட்டும் அப்படியும் இப்படியும் துளாவிக்கொண்டிருக்க. இப்போது இவ்வளவு மவுனமாக நின்றுகொண்டிருந்தவன் அன்று—? எனக்கு எப்படி ஞாபகத்துக்கு வந்தது! தொண்டை கிழிய அடிவயிற்றிலிருந்து கத்தினேனே. :போலோ: பாரத் மாதா கி, மகாத்மா காந்திகி சொல்கிறபோதும் அதுக்கு ஜே கோஷிக்கிறபோதும்: இன்னும் இங்குலாப் ஜிண்டாபாத், :டவுன்வித் இம்பீரியலிஸம் எப்படி கத்துவேன். அதோடு திலக் மகராஜ்கி, லாலா லஜபத் ராய் கி. சரோஜனி தேவிகி ஜே எப்படி போடுவேன். 'வந்தே மாதரம், அல்லாஹூ அக்பர் சத்தம் எப்படி எகிறிவரும். இந்த தெருக்கள் எத்தனை தடவை அவைகளை எதிரொலித்திருக்கின்றன! இதோ இப்போது அணிவகுத்து வரப்போகிறார்களே இவர்களைப்போல நானும் ஒரு மாணவன் அன்று. ஆனால்—

எனக்கு சிரிப்பு வந்தது. இவர்களைப்போலவா நான். தப்பு. சம்பந்தமே இல்லை இரண்டுக்கும். இது சர்க்கார் திட்டமிட்டு, கலாசாலை அங்கீகரித்து நடக்கிற ஒன்று. அது, சர்க்காருக்கு எதிராக கலாசாலை ஏற்காததை நடத்தின ஒன்று. மாற்றான் ஒருவனுக்கு மீண்டும் அடிமைப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் எழுந்த விளைவு இந்த ஊர்வலம். நூற்றாண்டுகளாக வேரூன்றி இருந்த மாற்றானை கிள்ளி எறியும் ஆவேசத்தில் அன்று எழுந்த விளைவு எங்கள் ஊர்வலம். இன்று நூற்றுக் கணக்கில் ஆயிரக் கணக்கில் இவர்கள் ஏன் லட்சக் கணக்குக்கும் போகலாம் நாடு முழுக்க. அன்று பத்துக் கணக்கில் சில பத்துக்கள், நூற்றுக் கணக்கில் சில நூறுகள் சேர்ந்தாலே பெரிய சாதனை. இன்று ராணுவ மோஸ்தர் காக்கி உடை, கருநீல சரிவுத் தொப்பி, செக்குகன கருப்பு பூட்ஸ். அன்று தூய வெள்ளைக் கதர், காந்திக்குல்லாய். இன்று இவர்கள் வரிசையில் மூவர்ணக் கொடி அசோக சக்கரம் நடுவில் பொறித்து. இதே மூவர்ணக் கொடி நடுவில் ராட்டை பொறித்து அன்று. இன்று வருகிற கொடிக்கு எதுவும் தாழ்ந்துபணியும். அன்று வந்த கொடியை பார்த்து மருண்ட வெருண்ட கண்கள். அரசியல் கட்சிகள்போல் கோஷங்களை எக்கிக் கத்திப் போகாமல் இவர்கள் மவுனமாக போகலாம். நாங்கள் பாடினோம். கோஷித்தோம். 'ஆபாசமான கவர்ண்மெண்டு, அக்ரம பார்லிமெண்டு.' இன்னும் 'ஆங்கிலப் பேய்களெல்லாம் இந்தியரை ஆட்டி வைக்கிறதைப்பார்' இப்படி பாட்டுகள். இந்த பாட்டுக்களுக்கு உயர்ந்த பட்சம் அன்று கிடைத்த பரிசு மூன்று வருஷம். இப்போது என்னென்லாமோ மெட்டிலே—சினிமா மெட்டுலே பாட்டுக்கள்—அரசியல் கட்சி மேடைகளிலே பாடுகிறார்களே அது மாதிரியா—வாய்க்கு வந்தது வாசுதேவா, நாக்குக்கு வந்தது நாராயணா என்றபடி. அப்போ வாழ்க கோஷம் ஓங்கி நிற்கும் இப்போ வீழ்க கோஷம்தான் தூக்கி கேட்கிறது. அப்போ ஒரே வீழ்க கோஷம்—'பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வீழ்க' இப்போ நீ வீழ்க. நான் வீழ்க... இன்றைய இந்த கோஷங்களும் அன்றைய அந்த கோஷங்களும்!

ஊர்வலம் வருகிற மாதிரி இருக்கோ?

குரல் பக்கத்தில் கேட்க அசைபோடுகிறதை நிறுத்தி தலைமுன் நீட்டி பார்த்தேன்,

'காணோமே' இன்னொரு குரல். அதுவும் பக்கத்தில்.

இரண்டு குரல்களுக்கு சொந்தக்காரர்களையும் ஒருதரம் பார்த்துவிட்டு முகத்தை எதிரே திருப்பினேன். அங்கே நிற்க நிற்க என் ஞாபகம் பழசை கிளறுவதிலேயேதான் நீடிக்கும் போலிருந்தது.

'ஏன் சார், இந்த சின்னப்பையன்களுக்கெல்லாம் கவாத் பழகிக்கொடுத்து; அந்த இமயமலை குளிர்லேபோய் உயிரைவிடவா?''

திடுக்கிட்டு திரும்பினேன். முதல் குரலுக்கான உருவம். என்னை ஒட்டி இடது பக்கம். அந்த வார்த்தைகள் அவநம்பிக்கையிலே பிறந்ததா இல்லை எளப்பம் பேசி வந்ததா? முகக்குறியில் தேடினேன். நிதானிக்க முடியவில்லை. எளிய மெல்லிய உருவம். சாய்ந்து நின்ற நிலை, கையை தொடையில் வைத்து. என்னைவிட நாலைந்து வயதுகூட இருக்கலாம். அனுமானம்தான். பழுப்பு ஏறின கதர் உடை. பேச ஒரு ஆள் கிடைத்துவிட்டது எனக்கு.

'இவர்களை எல்லாம் நாளைக்கே நேஃபாவுக்கு அனுப்பிவிடப் போகிறதாக முடிவுகட்டிவிட்டீர்களா?' நான் கேட்டேன்.

'நாளை இல்லாவிட்டால் இன்னொரு நாள்! என்று ஒரு கிண்டல் கிரிப்பு கலக்க பேசினார் அவர். ஆட்டுக்கு நோன்பு அன்றோடே போச்சா?''

விவகாரமாக, விஷயம் தெரிந்தவராகத்தான் அவர் பேசினார். எனக்கு விவகாரமாக பேசத்தோன்றியது. 'போகாதுதான். நோன்பை ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு நைவேத்யப் பண்டம் தயாராகத்தானே இருக்கணும்,' என்றேன். அவர் என்னை உற்றுப் பார்த்தார். நான் தொடர்ந்தேன்: ,காரியப் பைசலுக்கு பலாத்காரம் தான் வழி முறை என்று உலகம் ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு பலப்பெருக்க போட்டியாலேதானே பயமுறுத்தவேண்டி இருக்கு ஒருத்தனை ஒருத்தன். சீனாக்காரனுக்கு—இல்லை—வேறே எவனுக்கும் நம்பிக்கை விழுந்திருக்கிறபோது நமக்கும் அதிலே நம்பிக்கை விழுந்துதானே ஆகணும்,' அவரையே பார்த்துப் பேசினேன். அவரும் என் கண்களை சந்தித்தவாறே கேட்டுக்கொண்டிருந்தார்.

ஆனால் அவர் எனக்கு உடனே பதில் சொல்லவில்லை. ஒருவேளை அவருடைய சக்திக்கு அல்லது

அப்போதைய அவரது மன இணக்கத்துக்கு மீறின் அளவு தத்துவ ஆராய்ச்சியில் இறங்கிவிட்டேனே என்றுகூட நினைத்துவிட்டேன். இப்படி திடீர் திடீரென நான் இறங்கிவிடுவதை என் மனைவி பல தடவை அனுபவித்து அவஸ்தைப்பட்டு சுட்டிச் சொல்லி 'உங்களோடு பேசத்தெரியாது' எனக்கு என்று போயிருக்கிருள். அது மாதிரி இவரும்... அவர் பதில் எதிர்பார்த்து சுருதி இறக்கிப்பேச இருந்தேன்.

'எதிராளிக்கு நம்பிக்கை விழுந்துட்டதுனலே நமக்கும் விழுந்துதான் ஆகணும் என்கிற கட்டாயமா?' நறுக்கென பேசினர். 'இல்லே. தெரியாமல் தான் கேட்கிறேன்.'

அவரைப்பற்றி நான் நினைத்தது தப்பு என்பதை அவர் கேள்வி சொல்லிவிட்டது. 'விழுந்துதான் ஆகணும் என்கிற ரூல் இல்லே தான். ஆனல் எந்த ஒரு வழிக்கு நாம் நம்மை தயார் செய்து கொள்கிறோம் என்கிறதை பொறுத்து இருக்கிறது' என்று சொல்லிவிட்டு நிறுத்தினேன். 'யந்திர துப்பாக்கியைகொண்டு சுட்டு முன்னேறின சீனக்காரனை அப்போதைக்கு கையிலிருக்கிற குண்டுசியாலே தாக்க முற்பட்டாலும் பின்னடி ஆடோமாடிக் ஆயுதங்களை கையில் ஏந்தி முன்னேறி விரட்டித்தானே ஆகணும்,' என்று சேர்த்தேன்.

'அப்போ மகாத்மா காந்தி அகிம்சையாலே சுதந்திரத்தை வாங்கித்தந்தது...' பக்கத்தில் ஒரு குரல். இடது பக்கம் திரும்பி பார்த்தேன். முன்பு பேசின இரண்டாவது குரல். இளவட்டம்.

அது உண்மைதான் என்றேன். 'தம்பி பெரிய விஷயத்தை சின்ன கேள்வியாலே தொட்டுவிட்டாய். சுயராஜ்யத்தை தனி வழியிலே வாங்கித் தந்த காந்தி இப்போது இல்லே. இருந்தால் அவர் நேர்குரல் நமக்கு சந்தேகத் தெளிவுபடுத்தும். இப்போது அவனவன் தன் அறிவுக்கு எட்டினமட்டுக்கு யூகித்து பேசிக்கிறதோடு நிற்கவேண்டியதுதான். அகிம்சையாலே காந்தி சுயராஜ்யத்தை வாங்கித்தந்தது சரித்திரம். அதுமாதிரி சரித்திரம் இன்றைக்கு உண்டாக்க வேண்டுமானல்—

நான் கொஞ்சம் இழுத்து தயங்கி இருக்கவேண்டும்.

பளிச்சென அவர் குரல் வெட்டியது:—'சீனக்காரன் விஷயத்திலே அவனை நாம் நீங்கள் சொன்ன குண்டுசியாலே திருப்பித் தாக்க முற்படுகிறதுக்கு முந்தியே யோசித்திருக்கவேண்டிய விஷயம்,' கொஞ்சம் நிறுத்திவிட்டு தொடர்ந்தார். இப்போ நமக்குச் சொந்தமான பல ஆயிர சதுர மைல் அவன் கையில் கொஞ்சமும், வேறே அவன் கையிலே இல்லாது போனலும் நம் கையிலேயும் இல்லாத நிலேயிலே அதைப்பற்றி சிந்திப்பது சிந்திப்போன பால் விஷயம்; காந்திக்கு பின்னே நாம் ரொம்ப தள்ளி வந்துவிட்டோம்.

'பின் தள்ளியா, முன் தள்ளியா?' என்று கேட்டான் இளைஞன்.

'எப்படி வேண்டுமானலும் வைத்துக்கொள்ளேன் இரண்டும் ஒன்றுதான்'. என்ருர் அவர்.

என் வாக்கியத்தின் பின் பாதியை அவர் முடித்துவிட்டார். நான் எப்படி அதை முடிக்க இருந்தேன். அவர் கருத்தோட்டப் போக்கிலா? இல்லே வெட்டியா? எனக்கே நிர்ணயம் இல்லே. அவர் முடித்து திசை காட்டிய பிறகு மேலே அதைப்பற்றி சிந்திக்கவும் விரும்பவில்லே. அவர் சுண்டிவிட்ட பேச்சு என்னை கவ்விவிட்டது என் நினைப்போட்டத்தை தடைப்படுத்தும் அளவுக்கு. அவர் பேச்சிலேயிருந்து எதை எடுத்து சம்பாஷணையை தொடருவது என்று பார்த்தேன். அதுக்குள் அந்த வாலிபன் குறுக்கிட்டான்.

அகிம்சையாலே சுதந்திரத்தை காந்தி நமக்கு வாங்கித் தந்தது சரி. ஆனல் அதுவந்து உலகத்துக்கே.....'

அவர் அவனை முடிக்கவிடவில்லே. 'நமக்கு அவர் வாங்கித் தந்தவழியிலே உலகம் முழுவதுக்கும் வாங்கித்தர நேரம் அவருககு தரப்படவில்லே' என்ருர் அவர்.

இளைஞனும் விடவில்லே. 'காந்தி இருந்திருந்தால் நீங்கள் நினைக்கிறபடி நடந்திருக்கும் என்று நம்புகிறீர்களா?'

என்னை அவன் கேள்வி திகைக்கவைத்தது. இருந்திருந்தால் கேள்விக்கு யூகமாக ஏதேதோ பதில் சொல்லிவிடலாம். இப்படித்தான் நடந்திருக்கும் என்று அடமாக சொல்லிவிடமுடியாது. எனவே நான் தயங்கினேன். அவர் பதில் சொல்ல எதிர்பார்த்து அவர் முகத்தை பார்த்தேன். நான் பதில் சொல்ல எதிர்பார்த்து என் முகத்தை அவர் பார்த்தார். என் முகத்தில் வெறுமை யோட்டத்தை கண்டதும் அவர் வெடுக்கென சொன்னர்.

'தம்பி நான் நினைக்கிறபடி நடந்திருக்கும் என்று நம்புகிறேன என்ற கேள்விக்கு இங்கு அவசியம் இல்லே. காந்தி நினைத்தபடி நடந்திருக்குமா என்ற கேள்விதான் உசிதமானது. அதுக்கு பதில் காந்தி ஒருவர்தான் சொல்லி இருக்க முடியும்,

சாமர்த்தியமாக சமாளித்துச் சொன்ன பதில் தான். தப்பிக்கிற பாவனை தொனித்தாலும்.

'ஏன் நாமே கையாண்டு வெற்றி கண்டவழி தானே' என்றேன், நான்.

'ஏன் நாமே கைவிட்டுவிட்ட வழி என்றும் சேர்த்துச் சொல்லிவிடலாமே' என்ருர் அவர் துண்டிக்கிறமாதிரி. குரலில் ஒரு ஆத்திரம், நெஞ்சில் ஒரு கசப்பு, முகத்தில் ஒரு ஏளனம். 'நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ?'

நான் என்ன நினைக்கிறேன். அது அப்போது தேவையா அவருக்கு?பொறி கலங்க தட்டி வீழ்த்தின அவர் சொல்லுக்கு அப்புறம் நான் என்ன சொல்ல இருந்தது. அதை ஏற்பதா மறுப்பதா என்று நிதானிக்க முடியாத நிலே. அதைப்பற்றின பேச்சு பெரிய விவகாரத்துக்கு இட்டுச் செல்லும். தவிர கட்சி வாதம் பண்ணி முடிவுகாண முயல்கிற விஷயமா இது. மனசு தனக்குத்தானே தன் அனுபவத்தை கொண்டு தான் ஆராய்ந்ததை கொண்டு செய்யவேண்டிய தனித்தன்மையான முடிவு. பேச்சை திருப்பப்பார்த்தேன்' எப்படியும் இருக்கட்டும். அந்த வழியை உலகம் தன் பிரச்னை எல்லாத்துக்கும் தீர்வுகாண பயன்படுத்தக் கூடுமானல்—'

அவர் வாய்விட்டு சிரித்துவிட்டார். 'பேஷாகப் பயன்படுத்தலாம். யார் சொன்னது முடியாதென்று? இரண்டு அர்த்தமாகவும் எடுத்துக்கலாம். அவர்

சொன்னவிதம் அப்படி இருந்தது. 'கொஞ்சம் முந்தி நீங்களே சொன்னீர்களே, எந்த ஒரு வழிக்கு நாம் நம்மை தயார் செய்துகொள்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது என்று அந்த வரிகளையே திருப்பிச் சொல்கிறேன். அந்தவரிகளோடு இதையும் சேர்த்துக்கவேண்டும்.அந்த வழிகுறித்துகுறிப்பு நோக்கிச் செல்லும் பக்குவம் கொஞ்சமாவது நமக்கு ஏற்பட ஆன கால அளவையும் கணித்துப் பார்த்தோமானால் காரிய சித்தியைப்பற்றி கொஞ்சம் அனுமானிக்க முடியலாம்!

நமக்கு ஆன முப்பது வருஷகால அளவைக் கொண்டு உலகத்துக்கு அந்த விகிதாசாரத்தில் அவகாசம் தேவை அந்த வழிக்கு என்று சொல்ல வருகிறீர்கள்' என்றான் வாலிபன்.

'தம்பி, தம்பி, நான் அப்படி சொல்லவரவில்லை.' என்று பதறி அவர் மறுத்தார் தன்னை அவன் தப்பாக புரிந்துகொண்டு விடக்கூடாதென்று. கால அளவைவிட உணர்வு அளவுதான் முக்கியம். ஆனால் இந்த உணர்வு தீவிரம் ஆகி செயலீடுக்குவரச் செய்ய மூல புருஷனுக்கே அவ்வளவு காலம் ஆச்சே. அப்படி இருக்க உற்சவ விக்ரகங்களான நமக்கு...' என்று இழுத்தார்.

நாம் உற்சவ விக்ரகங்களா? வாலிபன் கேள்வி

ஆமாம் மூல விக்ரகத்தை மூலையிலே தள்ளி விட்டு ஆடம்பரமாக ஊர்வலம் போகிறவர்கள் நாம். முப்பது வருஷத்திலே ஒருவன் உயர்த்தினதை மூன்று வருஷத்திலே தாழ்த்தியும் விட முடியும் நம்மாலே. அவர் குரல் கசப்பு என் நாக்கில் தெரிந்தது. அவரையே வியப்புடன் பார்த்தேன்.

'அப்படி முடியுமா?' இளைஞன் அப்பாவித்தனமாக கேட்டுவிட்டான்,

மூன்று வருஷம் என்ன. மூன்று விநாடியிலே கூட இடித்து தகர்த்துவிட முடியும். பானை செய்கிறவன் கையும் பானையை உடைக்கிறவன் கையும் மாதிரி. அவர் பேச்சு உஷ்ணமாக வந்தது. தம்பி, சூரியனுக்கு ஏற ஆறு மணிநேரம். இறங்க ஆறு மணி நேரம். அது ஒரு நியதி. மரத்தில் ஏறுவதை விட இறங்குவது வெகு சீக்கிரம். அது வேறு நியதி. கொள்கைகள் நிலைத்து நீடிப்பதும் நசித்து மாறுவதும் அதை கடைப்பிடிப்பவர்களின் மனப்பிடிவாதத்தையும் வெளிப்புற சூழ்நிலை பாதிப்பையும் பொறுத்து இருக்கிறது.

அவர் பொதுப்படையாகவேதான் பேசினார். என்னைவிட அதிகம் ஆராய்ச்சியில் உழன்று அறிவு விசாலத்தைக் காட்டின வார்த்தைகள் அவருடையவை.

'என்ன, இன்னும் ஊர்வலம் வரக்காணோமே' என்று பக்கத்தில் கேள்வி.

'இந்தியன் பங்சுவாலிடிதானே' அதுக்கு ஒரு பதில் பக்கத்தில்.

'நாம் எங்கேயோ ஆரம்பித்து பெரிய ஆராய்ச்சியில் இறங்கிவிட்டோம்' என்றேன் நான்.

'ஆமாம், இந்த பையன்கள் எல்லாம் இமயமலை குளிரிலே போய் உயிரை விடுகிறதுக்கா இந்த பயிற்சி என்று நான் கேட்டேன். நாளைக்கே இவர்களை நேஃபாவுக்கு அனுப்பப் போகிறதாக நீங்கள் முடிவுகட்டிவிட்டீர்களா என்று நீங்கள் கேட்டீர்கள். அதிலேயிருந்து பேச்சு எப்படி எப்படியோ வாய்க் கால்விட்டது என்றார் அவர் நல்ல ஞாபகத்துடன்.'இப்போதெல்லாம் நான் இந்தமாதிரி ஆராய்ச்சியிலோ விவகாரத்திலோ இறங்குகிறதில்லை. ஆராய்ச்சி குழப்பத்திலே கொண்டுபோய்விடுகிறது சகதியிலே சிக்கின கால் மாதிரி. விவகாரம் வீம்புப் பேச்சிலேயும் அடத்திலேயும் போய் முடிகிறது முடிவுகாண முயற்சிக்காமல். சண்டைச் சாவல்கள் மாதிரி. நீங்கள் இரண்டு வார்த்தை சொல்ல அதுகளில் இருந்த சூடு உறைக்கவே எனக்குள்ளே இருந்து இரண்டு வார்த்தை வந்தது.

அவர் வார்த்தைகள்தான் முதலில் விவகாரம் பேசி வெளிவந்தன என்று அவருக்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை. மவுனமாக தலையை அசைத்தேன்.

'நீங்கள் இரண்டு பேரும் பேசினது எனக்கு ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது.' என்றான் வாலிபன்.

'பார்த்தீர்களா நாம் பேசுவது பையனுக்கு கதையாக இருக்கு. அவ்வளவுதான்' என்று சொல்லி அவர் கபடமாக புன்னகைத்தார்.

'நான் சொல்லவந்தது இது' என்று நான் அவர் சொன்னதை கவனிக்காமல் நான் நினைத்ததை சொல்ல முற்பட்டேன். அகிம்சை மூலம் புதுமுறை போராட்டத்தை வகுத்த மகாத்மா இராத்திரி நினைத்து விடிந்தவுடனே சத்யாக்ரகத்தை ஒரு ஆயுதமாக கையாண்டுவிடவில்லை.' என்று நிறுத்தினேன், மேலே சொல்லுங்கள் என்கிற மாதிரி அவர் பார்வை இருந்ததே தவிர குறுக்கிடவில்லை. தென்னாப்ரிக்காவில் அதை தானே பரீட்சித்து பார்த்து கொஞ்சம் வெற்றிகண்ட நம்பிக்கையில் தான் 1920, 30, 40 ஆகிய மூன்று காலகட்டத்து படிப்படியாக உயர்ந்த போராட்டங்களை வகுத்தார். அத்தனைக்கு பிறகுதானே நாம் சுதந்திரத்தை பார்க்க முடிந்தது என்றுதான் சொல்லவந்தேன். அதுக்குள் நீங்கள் 'ஆட்டுக்கு நோம்பு அன்றோடு போச்சா என்கவும் பேச்சு திசை திரும்பிவிட்டது.'

'அது மாதிரிதான், என்று வாலிபன் குறுக்கிட்டான்... நம மண்ணிலே ஒரு காலை ஊன்றி இருக்கிற சீனாக்காரனை இன்னும் ஐந்து, பத்து—இல்லை கூடவே வைத்துக்கொள்ளுங்கள் — வருஷத்திலே விரட்டணும் என்றாலும் இன்றிலேயிருந்து ஆடமாடிக் என்ன நியூகிளியர் ஆயுதங்களைக்கூட கையாளப் பழகினால்தான் முடியும்! உற்சாகத்துடன் சொல்லி நிறுத்தினான் இளைஞன்.

உண்மைதான் தம்பி என்றேன் நான் வாலிபனை பார்த்து. 'சரியாக சொன்னாய்.'

'ரொம்ப உண்மைதான்' என்றார் அவரும் குரலை உயர்த்தி. 'துப்பாக்கியை பிடித்து பார்த்திராத தேசம் ஜனம்தான் நாம் பாரு' என்றார் அவர் சிரித்து. 'வெள்ளைக்காரன் காலத்திலே ஏதோ வயற்றுப் பாட்டுக்காக பட்டாளத்திலே சேர்ந்ததை மதிச்சு நான் சொல்ல வரவில்லை; காந்தி வழியிலே துப்பாக்கிக்கே வழி இல்லாமல் போச்சு''

'ஏன் எதிராளிக்கு அப்பவும் அது தேவையாகத்தானே இருந்தது.' என்றான் வாலிபன்.

'ஆமாம் சத்யாகிரகியின் ஆத்மபலத்துக்கு முன்னே அவன் அதையும் உபயோகிக்கவேண்டித் தான் வந்தது' என்று சொல்லி நிறுத்தி அவர் முகத்தை பார்த்தேன். அவர் பேசவில்லை. மவுன

மாக எங்களை பார்த்துக்கொண்டிருந்தார். தான் கலந்துகொள்ளாமல் நாங்கள் சம்பாஷணையை தொடர்வதை எதிர்பார்த்த மாதிரி பட்டது. நான் சேர்த்தேன்: 'அவனுக்கு அந்த ஒரே ஆயுதத்தாலே வெற்றி கிடைத்தால்தான் உண்டு. அது தோற்று விட்டால்—வேறு எதுவுமே கிடையாது'. சத்யாக்ரகிக்கு ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று. காந்தீய முறையில் எத்தனையோ பார்த்திருக்கிறோமே. அத்தனைக்கும் பயிற்சி பெற்றவன்தான் ஒரு சத்யாக்ரகி...

'சத்யாக்ரகிக்கு பயிற்சியா' என்று கொஞ்சம் வியப்பு காட்டி கேட்டான் வாலிபன்.

அவர் கடகடென சிரித்துவிட்டார். என்னையே பார்த்தார். அவனுக்கு நீங்களே பதில் சொல்லுங்கள் என்பதுபோல.

'தம்பி, ஐந்து, பத்து, வருஷத்திலே சீனாக்காரனை விரட்ட ஆரம்பிக்கணும்னாலும் இன்றிருந்தே இப்படி மார்ச்பாஸ்ட்' துப்பாக்கி பிடித்து பழகி, அப்புறம் ஆடமாடிக், நியூகிளியர் ஆயுதங்களை பழகினால் தான் முடியும்னு கொஞ்சம் முந்தி ரொம்ப சரியாக சொன்னாயே. அந்த பயிற்சி சத்யாக்ரகிக்கு தேவை இல்லைதான். ஆனால்—இதைக்கேளு. உப்பளத்திலே இருந்து ஒரு பிடி சர்க்கார் உப்பை அள்ளின கையிலேயும் ஊர்வல முகப்பிலே கொடிபிடித்துப் போகிற கையிலேயும், தடுக்கப்பட்ட ஊர்வலத்தை மீறி நடத்திப் போகிறபோது முன் நீளுகிற முழங்காலிலேயும், பிடியை விடு, கலைந்துபோ என்று எலும்பு முறிய மேலே மேலே லாத்தி அடி விழுகிறபோது 'வந்தே மாதரம்' என்று சொல்லிக் கொண்டே கீழே உட்கார பயிற்சி தேவை. குடிபோதையிலே இருக்கிறவன் முன்னாலேபோய் அவன் காலில் விழுந்து 'குடித்துக் கெடாதே' என்று புலிக்கு உபதேசமாக புத்திசொல்லி வேண்டிக்கத் துணிய பயிற்சி தேவை. அன்னிய ஜவுளி ஏற்றிப் போகிற வண்டி முன்னாலே படுத்து வண்டியேறி இறந்த பாபுகனு துணிச்சலுக்கு பயிற்சிதேவை. வகுப்பு வெறியிலே தன் இனம் பிற இனம் அறிய இயலாமல் வெட்டிமாளும் மூர்க்கக் கூட்டத்தில் புகுந்து நிரபராதிகளை காப்பாற்ற முற்பட்டுதான் பலியான கணேச சங்கர் வித்யார்த்தி தியாகத்துக்கும், உயிருக்கும் பலமுறை ஆபத்தாகி கடத்தப்படவும் இருந்த சுசேதா கிருபாலனி தீரத்துக்கும் பயிற்சி தேவை; இதெல்லாத்துக்கும் மேலாக துப்பாக்கி குண்டு நெஞ்சில் பாயவும் 'ராம் ராம்' என்று ஜபித்துக்கொண்டே கீழே சரிந்த மகானுக்கும் பயிற்சிதேவை. போதுமா உதாரணம்?' என்று ஒரே மூச்சில் கூறி நிறுத்தினேன்.

வாலிபன் அதிர்ந்துபோனவன் மாதிரி முகம் காட்டி நின்றுகொண்டிருந்தான். தகவல் புதுமையினாலோ இல்லை என் பேச்சு வேகத்தாலோ. நான் பேசி முடித்ததும் தான் எவ்வளவு ஆத்திரத்தோடு வேகமாக பேசி இருக்கிறேன் என்பது எனக்கே தெரிந்தது. அவர் பக்கம் திரும்பினேன். அவர் முகம் கீழே தணிந்து இருந்தது.

'என்ன ஒன்றுமே பேசவில்லையே நீங்கள்.' என்று அவரை தூண்டினேன். 'நான் சொன்னதெல்லாம் சரிதானே. ஒரு மேடைப் பிரசங்கமே செய்துவிட்டேன் இல்லையா?' நான் சிரித்துவிட்டேன். அவரும் சிரித்துமழுப்பினாரே தவிர ஒன்றும் பேசவில்லை. அவர் சிரித்ததும் வலிந்து வரவழைத்ததாக பட்டது எனக்கு.

வாலிபன் கேட்டான், 'காந்தி நேரில் இதெல்லாம் சொல்லித்தந்து...'

அவன் வாக்கியத்தை முடிக்க விடவில்லை நான். 'தம்பி, என். சி. சி. பயிற்சி மாதிரி கூட்டிவைத்தோ. இல்லை டேரா,டூன் ராணுவ காலேஜ்ஜிலே சேர்ந்து படித்தோ பெறுகிற டிரெயினிங் இல்லை சத்யாக்ரக பயிற்சி. அர்ஜுனன் மாதிரி துரோணர் கிட்ட கற்றுக்கிற வாய்ப்பு எல்லோருக்குமே கிடைக்காது. இந்த சத்யாக்ரகிகள் ஒவ்வொருவரும் ஏகலைவர்கள். ஏகலைவன் கதை உனக்குத் தெரியும் என்று எதிர்பார்க்கலாமா? என்னடா, இப்படி கேட்கிறானே என்று நினைக்காதே. சினிமா கதைகளை ஒப்பிக்கிற இந்த தலைமுறைக்கு இந்த மாதிரி கதைகள் எத்தனையோ வெகு தள்ளிப் போய்விட்டன, எத்தனையோபோல. அதனால்தான் கேட்டேன்.'

வாலிபன் லேசாக சிரித்துக்கொண்டான்.

'சரி, தம்பி. இப்போது நான் அடுக்கினதெல்லாம் எங்கெங்கேயோ நடந்த விஷயம். போகட்டும். அவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் இது தெரியுமோ என்னமோ' நிறுத்தி அவரை பார்த்தேன்.

சொல்லுங்கள் என்பதுபோல பார்த்தார்.

'அதோ பாரு அந்த இடத்தை...' என்று சுட்டிக் காட்டினேன். என் சுட்டுவிரல் பக்கமாக வாலிபன் விழிகளை ஓட்டினான். என் கண்கள் குறிப்பாக அந்த இடத்தை தொட்டுவிட்டன. அவன் கண்கள் துளாவின.

அதோ அந்த சுவருக்கு நேரே, நடு ரோட்டில் அந்த துண்டு காகிதம் இருக்குபாரு. அதுக்கு ஒரு அடி தெற்கே தள்ளி...அந்த இடம்தான்.

வாலிபனும் அந்த இடத்தை நிதானித்து விட்டான்.

'சார், நீங்களும் பாருங்கள்' என்று அவரையும் இழுத்தேன். அதுக்கு முன்பே அவர் அந்த இடத்தை பார்த்துவிட்டார் போலிருக்கிறது. கண்கள் நிலைத்திருந்தன. எனக்கு கதை சொல்கிற ஆர்வம். வாலிபனை பார்த்து, 'அங்கே என்ன தெரிகிறது, என்றேன்.

'ஒன்றும் தெரியவில்லை' என்றான் வாலிபன்.

'ஏன், சார் உங்களுக்கு தெரிகிறதா?' அவர் பக்கம் திரும்பினேன். அவர் பார்வை அதைப் பார்த்து இல்லை. தரையைப் பார்த்து இருந்தது. ஒருவேளை வேறு கவனம், இல்லை நான் சொல்வதில் அக்கறை காட்டவில்லையோ என்னமோ. அவரை தொந்திரவு செய்ய விரும்பவில்லை. எனக்கு வாலிபன் ஒருவன் போதும்.

'ஆமாம், அந்த இடத்தில் ஒன்றும் இப்போது தெரியவில்லைதான் தம்பி. தெரியவில்லை என்பதனால் இருந்ததே இல்லை, இல்லை என்று ஆகிவிடாது. தார்ரோடு மூடிவிட்டது அதை. தார்பூச்சையும் ஊடுருவி, எக்ஸ்ரேயிலே பார்க்கிற மாதிரி அடியிலே இருக்கிற மண்ணை நான் பார்க்கிறேன் இப்பவும். அதை நான் அப்பவும் பார்த்தவன்.

'நீங்கள் என்ன சொல்லவருகிறீர்கள் என்றான் வாலிபன் புரியாமை படர்ந்த முகத்தோடு.

சரியாக முப்பத்திரண்டு வருஷத்துக்கு முன்னாலே அந்த இடத்திலே கொட்டின ரத்தம் மண்ணிலே உறிஞ்சிக்கிடந்ததை நான் இப்போதும் பார்க்கிறேன். அந்த கரும் சிவப்பு இன்னும் என் கண்ணிலே. அந்த ரத்தநெடி இன்னும் என் மூக்கிலே...' நான் நிறுத்தினேன். வாலிபன் வியப்போடு என்னை பார்த்துக்கொண்டிருந்தான். கதா சுவாரஸ்யம் அவன் முகத்தில் படிந்திருந்தது.

ஊர்வலம் அதோ வருகிறது போலிருக்கே. நீண்டு போகிற வீதியில் எட்டிப்பார்த்து தள்ளி ஒரு கொடி தெருவில் தெரிவதை பார்த்து சொன்ன ஒரு குரல். வரட்டும் என்ற பாவனையில் அந்த பக்கம் பார்த்துவிட்டு திரும்பினேன். 'அப்புறம்' என்ற மாதிரி பையன் முகத்தை கேள்விக் குறியாக உயர்த்தி இருந்தான்.

இந்த பழய ஞாபகங்கள் வந்தாலே எனக்கு ஒரு பதட்ட நிலைதான். ஆவேசம் வந்த மாதிரி பேசிக் கொண்டே போனேன். இதே இடம்தான். இங்கே வரும்போது சாயந்திர சமயம். காலேஜ் கடைசி பீரியட் நாலரை மணிக்கு முடியும். எப்போது மணி அடிக்கும் என்கிறதே நினைப்பு. வழக்கமாக கலாசாலை விட்டதும் ரூமுக்குபோய் புஸ்தகங்களை வீசி எறிந்துவிட்டு, அவசரமாக டிபனை சாப்பிட்டுவிட்டு ஜவுளிக்கடை மறியல் நடக்கிற இடத்துக்கு போகிற வழக்கம். 'சீமைத் துணி வாங்காதீங்க ஐயா காலில் விழுந்து கேட்டுக்கரேன்' என்று கும்பிட்டு நிற்கும் தொண்டர்கள் பக்கத்தில் நின்று நானும் கெஞ்சுவேன். கும்பிடுவேன். தொண்டன் கையை விலக்கிட்டு, குறுக்கே படுத்தாலும் தாண்டி கடைக்குள் போகிறவர்களும் உண்டு. பேசாமல் திரும்பிவிடுகிறதும் உண்டு. அந்த கதை எல்லாம் இப்போது தேவையில்லை.

நான் அவசர அவசரமாக வந்துகொண்டிருந்தேன். இன்று மாதிரியே தெரு அடைபட்டுக் கிடந்தது. கூட்டம். ஆனால் கூட்டம் இப்படி ஒரு நிலையாக இல்லை. கலைந்து கலைந்து கூடிக்கொண்டிருந்தது. கிட்ட வந்து பார்த்தால் மெயின் தெருவுக்குள் நுழைய முடியவில்லை. ஓடி ஓடி துரத்துகிற போலீஸ்—அதுவும் மலபார் ரிசர்வ் போலீஸ். அந்த காலத்து மலபார் ரிசர்வ் போலீஸை உனக்குத் தெரியாது. கூர்க்கா பட்டாளத்துக்கு அடுத்தபடி. ரொம்ப மூர்க்கம். சாடினால் அப்படி சாடும். அந்த மாதிரி சமயத்துக்குத் தான் அதை தருவழைப்பார்கள். வெள்ளைக்காரன் அப்படி தயார்ப்படுத்தி இருந்தான் அப்போது. தம்பி நடுவிலே நடுவிலே நான் என்னெல்லாமோ சேர்க்கிறேனே என்று நினைக்காதே. சொல்கிற விஷயத்துக்கு அதெல்லாம் பொருத்தமானதுதான். எட்டிப் பார்த்தேன் முன்னடி. பயனட் சொருகின துப்பாக்கிகளை முன் நீட்டிக்கொண்டு—மதயானை நடைபோட்டால் சத்தம் கேட்குமே, அது மாதிரி பூட்ஸ் சப்தம்—முன்னும் பின்னும் தாவி ஓடிக்கொண்டிருந்தது.

'சுட்டுட்டான், ஆள் காலி' என்ற குரல்கள் அலறின பக்கத்தில். "எங்கே? யாரு" பதறின குரல்கள்,

'அதோ அதோ...'

எட்டி தெருவில் பார்த்தேன். அதோ அந்த இடத்தில், கொடியும் கையுமாக நீண்டு விழுந்து கிடந்த ஒரு உடல் ரத்தம் கொட்ட. எங்கே இருந்து ரத்தம். நிதானிக்க முடியவில்லை. அதுக்குள்ளே இரண்டு மூன்று பயனெட் எங்கள் பக்கம் வந்து விரட்டினது. அது விரட்டுகிறபோது நாலெட்டு பின்னுக்கு, அது பின்வடித்ததும் பத்தெட்டு முன்னுக்கு இப்படி கிளித்தட்டு ஆடுகிற கூட்டம். பார்த்தது கேட்டது எல்லாம் சேர்த்து சொல்கிறேன். ஊர்வலம் வந்ததாம், கொடி பிடித்துக்கொண்டு. 144 ஐ மீறி ஊர்வலம். 144 என்றால் உனக்குத் தெரியுமே. அப்போது ஒரு வெள்ளைக்காரன் இங்கே டி. எஸ். பி. இங்கே மட்டும் என்ன நாடு முழுக்க வெள்ளைக்கார அதிகாரிகள்தானே பெரிய பதவிகளிலே நாய்க்கு எலும்பு போடுகிற மாதிரி நமக்கு சில சின்ன பதவிகள். அதிலே இருப்பது ரொம்ப பேருக்கு அப்போது. அந்த வெள்ளைக்கார டி. எஸ். பி. எதிரே லாரியை கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறான். புளிய மரத்திலே இருந்து குரங்குகள் தொப்தொப்பென்று குதிக்குமே அது மாதிரி இந்த ரிசர்வ் படை தரை அதிர குதிச்சிருக்கு துப்பாக்கியை தூக்கிண்டு. இறங்கினதும் பயனட்டை உருவி பொருத்தி தயாராகி இருக்கு. எல்லாம் இமைப் பொழுதிலே நடக்கும். நான் எத்தனை தடவை இதெல்லாம் பார்த்திருக்கிறேன். வெள்ளைக்காரனையும் ரிஸர்வ் பட்டாளத்தையும் பார்த்தவுடனே, கொடியை பிடித்து இருந்த கைமேலே உயர்ந்ததாம். 'இங்குலாப் ஜிண்டாபாத்' என்று ஆவேசம் வந்த மாதிரி கத்தி இருக்கிறார். சத்யாக்ரகிகள் முகத்தை அந்த மாதிரி சமயத்திலே நீ பார்த்திருக்கணும். உங்கள் சிப்பாய் ஆவேச முகத்தை இப்போ பார்க்கிற மாதிரி. இந்த இங்குலாப் ஜிண்டாபாத் கோஷம் யார் கொடுத்தது தெரியுமா? காந்தி கொடுத்தது இல்லை. வந்தே மாதரம், அல்லாஹூ அக்பர் பாரத் மாதாகி ஜே தான் அதுக்கு முந்தி. சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது சட்டசபையிலே குண்டு போட்டது உனக்குத் தெரியுமோ என்னமோ, சரி தெரிந்ததாக நினைத்துக்கிறேன். குண்டை எறிந்தவர்கள் — பூதகேஸ்வரதத் — யதிந்திர நாத்தாஸ்—பகத்சிங்—கேள்விப்பட்டிருப்பாயே அவர்கள் கொடுத்தது. அவர்கள் அஹிம்சை வழிக்காரர்கள் இல்லைதான். ஆனாலும், அந்த கோஷத்தை சத்யாக்ரகியும் தனதாக்கிக் கொண்டான். இன்று சுபாஷ் கோஷமான 'ஜேஹிந்த்'தை நாம் ஆக்கிக் கொண்டிருப்பதுபோல. காந்திய வழியும் ஒரு புரட்சி முறைதானே. 'புரட்சி ஓங்குக' என்பது அவனுக்கும் ஏற்குமே. பார்த்தாயா? கதையைவிட்டு விட்டு எங்கேயோ போகிறேனே. லகானை கொஞ்சம் தளரவிட்டா போச்சு எனக்கு! சிரித்துச் சொன்னேன்.

அப்புறம்; அவர் கத்தவும் வெள்ளையனுக்கு ஆத்திரம். வெறி நாய் மாதிரி கத்தினானும், 'டிஸ்பெர்ஸ்' என்று. 'கலைந்து போ'வுக்கு கீழ்ப்படியவா ஒரு சத்யாக்ரகி அங்கே வருவான். அவன் கத்தி முடியவும் வந்தேமாதரம் என்று கூவிக்கொண்டே ஒரு எட்டு முன் வைத்திருக்கிறார் கொடியை பிடித்திருந்தவர். அவ்வளவுதான் கட்டைப் பக்கம் திருப்பின துப்பாக்கியோடு நாலைந்து போலீஸ் வந்து அவர்களை மறித்து நின்றிருக்கிறது. அவர் இன்

ஒரு எட்டு முன் வைத்திருக்கிறார். துப்பாக்கி கட்டை அவரை பின் தள்ளி இருக்கிறது. கொடி யோடு பின் சாய்ந்து சரிந்திருக்கிறார். முன் வரிசை மற்றவர்களும் விழுந்திருக்கிறார்கள். அதுக்குள் வெள்ளைக்காரனிடமிருந்து ஏதோ சமிக்ஞை வந்திருக்கிறது. துப்பாக்கி கட்டைகள் பின்வாங்கி இருக்கின்றன. விவரம் புரியவில்லை. வெள்ளைக்காரன் முன்னாலே ஒரு கல் வந்து விழுந்திருக்கிறது. தொடர்ந்து இன்னொரு கல்

சத்யாக்ரகி இதை செய்யமாட்டான். ஏன், காந்திய சத்யாக்ரகத்தை புரிந்துகொண்ட அந்த நாளைய கூட்டமும் இதை செய்யாது. சத்யாக்ரகப் போராட்டத்தில் எதை செய்யலாம் செய்யக் கூடாது என்கிறது 'வானர சேனை' பாலர்களுக்குக் கூட நரம்புலே உள்ளோடும். அப்போதெல்லாம் சபர்மதி ஆக்ஞை ஆணை வைத்தமாதிரி. இப்போ மாதிரி கூட்டத்திலே எங்கிருந்தோ, யார் மீதோ, எதுமேலேயோ ஆத்திரப்பட்டு கல்லெறிந்துவிட்டு ஓடிப்போகிற சிறுபிள்ளைத் தனம், பொறுப்பின்மை சத்யாக்ரக கால பிஞ்சுகளுக்குக்கூட கிடையாது. சத்யாக்ரகத்திலே துராக்ரக நிழல் பட்டுவிட்டால் காந்தி என்ன செய்வார்: இந்த நாட்டு முப்பத்தைந்து கோடிக்குமே தெரியும். சரி பார்த்தியா?

லகானை மறுபடியும் இழுத்துப் பிடிக்கவேண்டி இருக்கு. சத்யாக்ரகி கல்லெறியாதபோது தனக்கு ஆத்திரம் உண்டாக்கிக்க ஒரு காரணம் வேண்டாமா, வெளிக்கு ஒரு நியாயம் காட்டவேண்டாமா? போலீசே கல்லெறிக்கு ஏற்பாடு செய்துக்கிறதும் உண்டு. அந்த மாதிரிதான் அன்றும். வெள்ளைக்காரன் தொப்பியைக்கூட அது தொடவில்லை. அவ்வளவு ஜாக்ரதையாக விழுந்திருக்கிறது. அடுத்த கல்லும் அப்படித்தான். அவ்வளவுதான் போதாதா வேட்டை நாய்க்கு ரோஷம் ஊட்ட. அவ்வளவுதான். ரிவால்வரை சரக்கென்று உறையிலிருந்து உருவி இருக்கிறான்.

'ஐயோ சுடப்போகிறான், கூட்டம் பதறி கத்தினது. 'வந்தே மாதரம், மெய்மறந்து கத்திவிட்டது கூட்டம்.' கல்லை விட இந்த வந்தேமாதரம் கிலி பெரிய கிலி வெள்ளைக்காரனுக்கு. வ. உ. சி. யை கைது செய்த சமயம்—1906 வாக்கிலே தூத்துக்குடியிலே நடந்தது இது தம்பி. குதிரை மேலே போய்க்கொண்டிருந்த அந்த வெள்ளைக்கார அதிகாரி--சப் கலெக்டர் ஆஷ் துரை போகிறதை பார்த்த சிறு பையன் வந்தே மாதரம் என்று கத்திவிட்டான். அடுத்த விநாடி சுருண்டு விழுந்து ரத்த வெள்ளத்திலே கிடந்தான் குழந்தைப் பையன். அவன் வம்சம்தானே இந்த டி.எஸ்.பி.யும். நடுங்கிப் போய்விட்டான். முன்னாடியே எதுக்கும் எச்சரிக்கையாக மாஜிஸ்டிரேட் கிட்ட உத்திரவும் வாங்கி வந்திருக்கிறான். சுட்டுத்தான் ஆகணும்னு அவன் முடிவு கட்டிவிட்டான் போலிருக்கு. பஞ்சாப் படுகொலை புகழ் டையர் துரை பிசாசு அவனுக்குள்ளே ஏறி இருக்கும். இல்லாவிட்டால் பயமுறுத்தி கலையவைக்க காற்றிலேயாவது சுட்டு வேடிக்கை காட்டமாட்டானா?

நேர் எதிரே சுட்டுவிட்டான். கல் எந்த பக்கம் இருந்து வந்தது அவனுக்கு தேவையில்லை. ரிவால்வர் டிரிக்கரை இழுத்துவிட்டுவிடணும். அவன் கை அதுக்குத்தான் பறந்திருக்கிறது. அவன் சுடவும் கொடியை பிடித்திருந்தவர் எழுந்திருக்கவும் சரியாக இருந்திருக்கிறது. அடுத்த விநாடி அவர் 'வந்தே மாதரம்' என்று கத்திக்கொண்டே சரிந்தவர்தானும். ரத்த வெள்ளம். எந்த இடத்திலிருந்து கொப்பளித்து வந்தது. தள்ளி இருந்து நிதானிக்க முடியவில்லை. ஒரு சுடுகையோடு நிறுத்தி இருக்கிறான். விளைவை ஆராய்ந்து கொண்டிருந்திருக்கிறான் போலிருக்கு அவன். என்ன இருந்தாலும் துப்பாக்கி சூடு. பாம்புக்கே படை நடுங்கும் என்று பழமொழி. துப்பாக்கிசப்தம் கேட்டு திக் பிரமையடித்து நின்ற கூட்டம் சுவரோடு சுவராக பதுங்கி பறந்தது. தெருவின் இரண்டு பக்கமும் வளைத்து மறித்து லாரிகள். அதிலிருந்து கீழிறங்கி :பயனட்டை முன் நீட்டிக் கொண்டு வெறிக் கண்களோடே மலபார் ரிஸர்வ் போலீஸ்காரர்கள். மருண்டு கூட்டம் ஓடினாலும் ஓட முடியாதபடி அடைப்பு. ஓடினால் அதையே சாக்காக கொண்டு இன்னும் சாடலாம் என்ற நினைப்பில் இருந்திருப்பான் அந்த வெள்ளையன்.

'சுட்டுட்டான், சுட்டுட்டான்!

ஆள் காலி

ரத்தம் பீறிடுது'

இருந்த இடத்தைவிட்டு அசையாதே.

ஒரு எட்டு நகர்ந்தாலும் போச்சு.

கோஷம் போடாதே

அவன் வெறியிலே இருக்கான்.

லாரிக்கு வழியைவிட்டு சுவரோடு பதுங்கி நில்லுங்க

நின்னு குத்தி காளை மாதிரி அவன் ரிவால்வரும் கையுமாக சிறுத்தை நடைபோட்டு காலை மாற்றி மாற்றிப்போட்டு நாலு பக்கம் பார்க்கிறான். கொஞ்சம் தள்ளி கொடியை பிடித்த கையோடே அந்த சத்யாக்ரகி ரத்த வெள்ளத்தில். அந்த பக்கம் பார்த்துவிட்டு முகத்தை திருப்பிக்கொள்கிறான்.

துடிக்கிற ஆளை தூக்கிச் செல்லக்கூட விடமாட்டாரு பாவி! வாய்க்கு வாய் அலறல். அந்த உடல் துடிக்கவில்லை. ஆத்மாவே அடங்கிவிட்ட மாதிரி கிடந்தது. அதையே பார்த்தவன் என்னை மறந்துவிட்டேன். அடுத்த விநாடி வாங்க தூக்கிப் போகலாம் என்று கூவிக்கொண்டே முன் பாய்ந்துவிட்டேன். சத்யாக்ரகி மீது குனிந்தேன். கொடியை பிடித்த கையை நெகிழ்த்தி கொடியை அகற்றிவிட்டு தலையில் கைகொடுத்து தூக்கினேன். கூட ஓடிவந்த மூன்று நான்கு பேர்கள் தங்கள் துணிகளால் ரத்தம் வெளிவருகிற இடத்தை கட்டினார்கள், துணிகளை எல்லாம் மீறி ரத்தம் வெளித்தெரியும் ஈரம். அவரை எப்படி தூக்கி வந்தோம் என்கிறதெல்லாம் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வெள்ளையன் எங்கள் பக்கம் துப்பாக்கியை முதலில் திருப்பினானும். ஐயோ பாவி சுடப்போகிறானே என்று பார்த்தவர்கள் பயத்தில் கத்தினார்களாம். பிறகு அவன் துப்பாக்கியை உறைக்குள் போடுவதையும் பார்த்தார்களாம். இதெல்லாம் நாங்கள் அவரை தூக்கிக்கொண்டு வெளியே வந்ததும் பேசின குரல்களிலிருந்து தெரிந்துகொண்டது.

கதையை சொல்லிவரும்போது நான் அன்று அந்த இடத்தில் இருந்த நிலைக்கே போய்விட்டேன். என். சி. சி. ஊர்வலம், நண்பர், அந்த வாலிபன் நினைவெல்லாம் இல்லவே இல்லை. கதையே சொல்

விக்கொண்டே போனேன். 'யாரோ,' 'காருக்கு, என்று கத்தினர்கள். சத்யாக்ரக ஆஸ்பத்திரி கார் அதோ'. குரல்கள். காரில் போனோம். என் உடல் ரத்தத்தை உணர்ந்துகொண்டிருந்தது. சட்டை மூலம். மற்றதை எல்லாம் வளர்த்த விரும்பவில்லை. அவர் மயக்கம் தெளிந்து எழுந்தபோது. அதை நாங்கள் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். ஆஸ்பத்திரியில் முதல் சிகிச்சை ஆனபிறகு. தம்பி, இங்கேதான் நீ கவனிக்கவேண்டிய இடம். இது வரைக்கும் சுவாரஸ்யமான கதை. அவர் மயக்கம் கலைந்து விழித்ததும் நடுங்கிய குரலில் அவர் உதடுகளுக்கு வெளியே நழுவின முதல் வாக்கியம் என்ன தெரியுமா?

கொ...டி...எ.ங்.ங்.கே? அவர் கை கொடிக்காக துளாவியது,

'ராமனுதன்!' கூவிக் கத்தின குரலைக்கேட்டு தூக்கிப் போட்ட மாதிரி திரும்பினேன். என் பெயரை யார் அங்கு—?

என்னோடு இத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தாரே அவரேதான்,

'முப்பத்தி இரண்டு வருஷத்துக்குப் பிறகு நானும் உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்னாலே. உங்களுக்கும் என்னை இனம் காணமுடியவில்லை. என் தோள்மீது தன் வலது கையை வைத்தார். கொஞ்சம் கால் தடுமாறியதை கவனித்தேன்.

'துரைசாமியா நீங்கள்' நானும் கூவிவிட்டேன். சத்யாக்ரக ஆஸ்பத்திரியில் ஒன்றிரண்டு நாட்கள் பார்த்தது. அந்த காயத்துக்கு சதயாக்ரக ஆஸ்பத்திரி வைத்தியம் போதாது. காலுக்கே ஆபத்து வந்திருக்கிற நிலை. பிறகு பெரிய ஆஸ்பத்திரிக்கு. சில நாட்கள் பார்த்தது. அப்புறம் அவர் எங்கேயோ நான் எங்கேயோ. இன்று அவரும் நானும் அதே இடத்தில்!

அவர் தோள்மீது கைவைத்தேன். அதைப் பிடித்துக்கொண்டு தன்னை சமாளித்து நின்றுகொண்டார். அப்போது குனிந்து அவரை அளவிட்டேன். வாலிபன் இருவர் முகத்தையும் பார்த்துக்கொண்டிருப்பான். அவனுக்கு எல்லாம் நாடகம் சினிமாபோல் இருந்திருக்கும்.

அவரே முந்திக்கொண்டார். நன்றாக பாருங்களேன் காலை. காலை பார்த்தேன். குண்டு சதை கிழித்த இடத்திலிருந்து கால் உருவம் இழந்து ஏதோ மற்றவர் உதவி இல்லாமல் தானே சாய்த்துச் சாய்த்து நடந்து போக முடிகிற அளவுக்கு உபயோகமாகிற கால். அதுக்கு மேலே அதை காலாக மதிக்கமுடியாது.

வாலிபனும் காலையே பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்தேன். 'தம்பி. இது என்ன தெரியுமா? சத்யாக்ரக பரிசு.' துரைசாமி சிரித்தார் வாலிபனை பார்த்து. அவர் சொன்னர்! தம்பி சத்யாக்ரகிக்கு இப்போ என்னென்லாமோ பரிசு-ஐந்து ஏக்ரா நிலம், பரிசு மாதிரி கிடைத்திருக்கும். இந்த பரிசுக்கு அதெல்லாம் ஈடாகாது. இன்றைய என். சி. சி. நாளைக்கு மிலிடரிக்கு தேவைப்படலாம். அவன்தான் குண்டுபட்டு கையையும் காலையும் இழக்க முடியும் என்பது இல்லை. அன்றைய ஒரு சத்யாக்ரகி எதையும் இழக்க முடியும். இழக்கத்தயாரானவன் என்பதை மட்டும் நீ தெரிந்துகொண்டால் போதும். ஆனல் அவன் இழக்க நேரிடுகிற வாய்ப்பு உங்கள் இன்றைய சிப்பாய்கள் இழக்க நேர்வதிலிருந்து மாறுபட்டது. உங்கள் சிப்பாய் பலாத்காரத்தை வீசுவான், வாங்கியும் கொள்வான். சத்யாக்ரகி பலாத்காரத்தை வாங்கிக் கொள்வானே தவிர கொடுக்க மாட்டான். தான் தாங்குவான், தாக்க மாட்டான். அதுதான் காந்தியுகம் பார்த்த அதிசயம். உன்தலைமுறைக்கு அது தெரியாது. ஏன்னா இது வரை அது தொடரவில்லை. ஏன் என்ற காரணங்களுக்குள் வீணுக இறங்க வேண்டாம். அதோ ஊர்வலம் வந்துட்டது போலிருக்கே!

பூட்ஸ்மிதிகளேபரசப்தம் பக்கத்தில் கேட்டது தார்ரோடு பெயரும்படியாக அதிரடி நடை. பாரதி எதிர் பார்த்த நிமிர்ந்த நெஞ்சுக்கார இந்த பிஞ்சுகள போகிற பாங்கை பார்க்கிறபோது பெருமிதமாகத்தான் இருந்தது.

பார்த்தீர்களா நம் பையன்களை, நேரே போய் சீனக்காரனை விரட்டி விட்டுத்தான் மறுஜோலி பார்க்கப் போகிருர்கள்.' பக்கத்தில் ஒரு கேலிக்குரல்.

பேசியது அவர்இல்லை இப்போது. நான் அவர் முகத்தை பார்த்தேன். அவர் முகம் என்னை பார்த்து இல்லை. கேலி பேசின முகம் பார்த்து திரும்பி இருந்தது: முகத்தில் ஒரு சீற்றம், குரல் எகிறி வந்தது.

''ஐயா, இப்படித்தான் முப்பது நாப்பது வருஷத்துக்கு முன்பு சொன்னவர்கள் உண்டு. தொண்டர்கள் காந்தி குல்லாவும் கதர் உடையுமா கொடியை பிடித்துக்கொண்டு முதல் சுதந்திர தினத்தன்று—சுதந்திரம் வாங்கின பிறகு நடந்த முதல் ஊர்வலத்தை சொல்ல வரவில்லை—இனி பூரண சுதந்திரம்தான் நமது லட்சியம் என்று விரதம் எடுத்துக்கொண்டு ஆயிரத்தி தொளாயிரத்து முப்பது ஜனவரி இருபத்தாறும் தேதி முதல் சுதந்திரதின ஊர்வலம் நடத்தின போதும் ஊர்வலத்தை பார்த்துக்கொண்டிருந்த சில முணுமுணுப்புகள் என் ஞாபகத்துக்கு வருகிறது. 'இப்படி கொடியை பிடித்துக்கொண்டே போய் வந்தேமாதரம் கத்தியே வெள்ளைக்காரனை சீமைக்கு திருப்பி அனுப்பிவிட்டுத்தான் இவர்கள் வீடு திரும்பப் போகிருர்களாம். இவர்கள் கையிலே வெள்ளைக்காரன் 'இந்தா'ன்னு சுயராஜ்யத்தை கொடுக்கப்போகிருன்!' என்றவர்கள் உண்டு சார்.'

அவர் பேசி நிறுத்தின உக்ரத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கேலிக்குரல் வாயடைத்துக்கொண்டது.

'நல்லசூடு' என்ருன் வாலிபன். செவிடுபடும் பூட்ஸ் மிதி, மன உரத்தைநிரூபிக்கிற தெம்பு நடை. வேகத்தை காட்டுகிற கை வீச்சு. துணிச்சலை தெரியச் செய்கிற நெஞ்சுத் தூக்கம். நான் சட்டென்று குனிந்து தரையைப் பார்த்தேன். முதல் வரிசை அந்த இடத்தில் அதிரடிமிதி போட்டுச் சென்றது. தொடர்ந்து மேலும் மேலும் வரிசைகள். அந்த மிதி கால்களுக்கு கீழேயே பார்த்துக்கொண்டிருந்தேன். கடைசி வரிசையின் மிதியும் பட்டு ஊர்வலம் நகர்ந்துவிட்டது. நான் அந்த இடத்தையே பார்த்துக்கொண்டிருந்திருக்கிறேன். அவர் கவனித்து விட்டார் போலிருக்கு. 'என்ன அங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?

(இதன் தொடர்ச்சி 223-ம் பக்கம்)

# கருவா? நடையா?

## வித்வான் இரா. இராசகோபாலன்

'கரு' இல்லாமல் கதை அமைவது இல்லை. ஆகவே கரு கதைக்கு இன்றியமையாதது என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் கதையின் வெற்றிக்கு வழியமைப்பது நடையேயாகும்.

தேர்ந்த எழுத்தாளர் சிலர் கரு இல்லாமலும் கதை எழுதி வெற்றி பெற்றுள்ளார்கள். திரு. கு. அழகிரிசாமி அவர்கள் தம்முடைய கதைகள் சிலவற்றில் கருவேயில்லை என்று குறிப்பிட்டுள்ளார். நகைச் சுவை இழைந்த அவருடைய நடை நயம்தானே வெற்றிக்கு அடிப்படையாக உள்ளது?

மிக அருமையான கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நடை இழிவால் கதையைச் சீரழிவு செய்துவிடலாம். மிகச் சாதாரணமான கருப் பொருளை வைத்துக்கொண்டு சொல்லுந் திறனால் வெல்லும் நிலைக்கு அணி செய்துவிடலாம்.

'பிரெஞ்சு நாட்டார் ஒருவர் எல்லா இலக்கியங்களையும் ஆராய்ந்து, முப்பத்தாறு வகையான கதைக் கருக்களே இருப்பதாக-இருக்க இயலும் என்று—குறித்துள்ளார்' என்று அறிஞர் மு. வ. அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.

வேறோர் அறிஞர் கதைக்குரிய கருக்கள் ஐந்து என்று தொகைப் படுத்தியுள்ளதாக எனக்கு நினைவு. ஒருவனை இரண்டு பெண்கள் காதலிப்பது, ஒருத்தியை இரண்டு ஆடவர் ஆசைப்படுவது...அவற்றுள் ஒன்று. இவற்றால் எவ்வளவு சிக்கல்கள் எழுகின்றன! அவ்வளவு சிக்கல்களும் எண்ணிறந்த கதைகட்குக் கருப்பொருளாய் அமைந்திருத்தலை நாம் அறியலாம்.

கம்பராமாயணத்தைப்பற்றி நண்பர் குறிப்பிட்டார். ஒருவன் மனைவியை இன்னொருவன் விரும்பித் தூக்கிச்சென்று விடுகிறான். இதுதான் அடிப்படை நிகழ்ச்சி. இதனால் எழுந்த சிக்கல்கள் தாமே காவிய முழுதும் பரிணமித்துள்ளன? இதேபோலும் நிகழ்ச்சியே பழங்காலத்தில் பலநாட்டுக் காவியங்கட்கும் அடிப்படைக் கருவாக அமைந்துள்ளது. வான்மீகி எழுதிய ஆதி காவியத்தின் இந்தக் கருவே ஹோமர் என்ற இத்தாலியப் பெருங் கவி தீட்டிய வீரகாவியத்திற்கும் உள்ளுறையாக அமைந்திருக்கிறது. இவ்வாறு இராமாயணக் கதை உலக முழுதும் பல்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப வடிவெடுத்துள்ளது.

ஆகவே தமிழ்க் கவியரசர் கம்பரும் இந்தப் பழைய கருவை—கதையை வைத்துப் பெருங்காப்பியம் இயற்றியுள்ளார். இயற்றியதில் இணையற்ற வெற்றியும் கண்டுள்ளார். கேளாரும் வேட்கும்படி மொழிந்துள்ளார். அவருடைய வெற்றிக்குக் காரணம் நடைச் செழுமை யன்றி வேறென்ன?

இடத்துக்கேற்ற சொல்லமைப்பு, நிலைமைக் கேற்ற யாப்பு, நல்ல வருணனைத் திறம், அரிய பெரிய கற்பனையாற்றல் இவற்றை இழைத்துச் செல்லும் கம்பரது சீரிய கூரிய நடைத்திறம் தானே, அவரது கருத்தைப் பிடிக்காதவர்க்கும் திகைப்பைக் கொடுக்கிறது? உவப்பைக் கொடுக்கிறது? வைணவக் காப்பியமாக இருந்தபோதிலும் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றவரையும் மயங்கவைத்தது?

அரசியலை விளக்கும்போது அரசநடை போடுகிறார் கம்பர், அமைச்சியலில் அமைச்சர்; அந்தணர் என்றால் அந்தணர்; அரக்கர், அரக்கி, அனுமான், வீடணன் எல்லாம் அவர்! அவ்வப் பாத்திரமேயாக அதற்குத் தக நடைபோடும் கம்பரின் கவிதை நடையே அவருக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தது!

சிலப்பதிகாரம் தமிழ்ப் பெருங் காவியமாகத் திகழ்வது. அதில் என்ன கதைப் பொருள் இருக்கிறது? ஒருவன் இரண்டு பெண்களை விரும்புகிறான். அதனால் விளைந்த நிலைமை-வெறுந் துன்பம். இந்த ஒரு கருவை வைத்துக்கொண்டு, முப்பெருங் காண்டங்களும் முப்பது கதைகளும் கலீர் கலீர் என்று ஒலித்து நம்நெஞ்சை யள்ளுகின்றன என்று சொன்னால் அதன் செஞ்சொல்லழகும் ஆற்றொழுக்குப் போன்ற நடையும் தாமே காரணம்?

பூம்புகாரை விட்டுக் கடக்குமுன் கண்ணகி கோவலனை நோக்கி 'மதுரை மூதூர் யாது?' என வினவுகிறாள். எவ்வளவோ தொலைவிற் கிடக்கும் மதுரை நகர் எங்கே? வந்துவிட்டதா? என்று கேட்கிறாள் அந்த இளங்கொடி.

அதற்குக் கோவலன் 'ஐந்தாறு காதம், அணித்து' என நகைத்துக்கொண்டே சொல்லுகிறான். ஐந்தாறு என்பது மிகக் குறைவாக, மிகவும் அணித்தாக இருப்பதுபோல் தோன்றுகிறதல்லவா? ஆனால் முப்பது காதம் நெடுந்தொலையாகுமே! அந்த நெடுந்தொலை குறைவாகத் தெரியும்படி 'ஆறைங்காதம்' என்று கூறுகிறான். கோவலன் கூற்றால் நெடுந்தொலை சுருங்கிவிடுவதுபோல் தெரிகிறது! இளங்கோ தம்முடைய நடைச் சிறப்பால் இயற்கையான கவித் திறத்தால் சிறிய கருவைச் செழிப்பான காவியமாக்கித் தடுமாறுளத்தைத் தோற்றுவிக்காமல் நீருட் புக்காற் போன்ற இன்பம் நல்கி ஏமாப்பு அளிக்கிறது.

காமம், வெகுளி, மயக்கம்...என்று திருவள்ளுவர் ஓரிடத்தில் அடைவுபடுத்திக் கூறுகிறார். இவையே மனிதனை ஆக்கிப் படைத்து அலைக்கழிக்கும் உணர்ச்சிப் பிழம்புகள். இவையே சகல கதைகளுக்கும்—சகல உயிர்களுக்கும் கருவாக அமைகின்றன.

குழந்தை பொம்மைமேல் ஆசை வைக்கிறான். அது கிடைக்காவிடில் அல்லது பிறர் அதனை எடுத்துவிடில் சினக்கிறான். அது அரியபொருள் என்று மயங்குகிறான். இனம் புரியாத உறவுடன் இன்பங் காணுகிறான்.

பாலப்பருவத்தில் புத்தகங்களை விரும்புகிறான். இளமைப் பருவத்தில் அடுத்த பாவிடம் ஆராத அவாக் கொள்ளுகிறான். 'அடுத்து பதவிபட்டம்

பெருமை என்று ஆசை தாவித் தாவிச் செல்லுகிறது. வெற்றி தோல்விகள்—இன்ப துன்பச் சுழல்களில் இணைந்து அவனும் ஓடுகிருன்.

தனக்கு — தன்னவர்க்கு பின்னவர்க்கு என்று இடையருது நெஞ்சின் அலைகள் போராடுகின்றன; எழுகின்றன. விழுகின்றன.

இவற்றைத் தவிர வேறென்ன கருப்பொருள்கள் இருத்தல் இயலும்?

கருவில் தனிச் சிறப்பு இல்லை. உயிர்க்கரு பத்துத் திங்கள் உள்ளே இருக்கிறது. அதில் எல்லாம் ஒரு படிமைதான். பிறகு நடையில்தான் வேறுபாடு பிறக்கிறது. நன்று என்றும் தீது என்றும் மேலென்றும் கீழென்றும் தன்னலம் என்றும் பொதுநலம் என்றும் உரைக்கப்படுவன எல்லாம் நடையாலே வருவனவே!

கருப் பொருட்கள் என்றும் நின்றும் நிலவுகின்றன. அவை களிமண்ணைப் போன்றவை. அதில் படுகின்ற கைத்திறம் தான் உருவங்களை வேறுபடுத்துகிறது. மனிதனுகவும் ஆக்கலாம். குரங்காகவும் ஆக்கலாம், களிமண் என்னவோ ஒன்றுதான். அங்கு நினைத்ததை உருவாக்கும் நடைச்சிறப்பே—கைத்திறமே வெற்றியை வழங்குகிறது. காகிதமும் வண்ணக் குழம்பும் வினைச்சிறப்பிலான் கையிற் கிடைத்தால் சிறப்பிழந்து 'விடுகின்றன. வல்லுநன் கையில் கிடைத்தால் உயிரோடு ஒளியோடு சிறப்படைந்து நிற்கின்றன.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். எளிய நிகழ்ச்சிகள் — அன்ருடம் நாம் காணக்கூடியவை—கண்டாலும் அற்பம் என்று அலட்சியம் செய்யக்கூடியவை—வல்லுநன் கையில் அகப்பட்டு அமரத்துவம் பெற்றுவிடுகின்றன. சிந்தனையைத் தூண்டிச் சிரித்து நிற்கின்றன!

திரு. ஜெயகாந்தனின் 'வாய்ச் சொற்கள்' கதையை எடுத்துக் கொள்ளுவோம். கண்ணில்லாத ஒருவனும், கண்ணில்லாத ஒருத்தியும் காதல் கொள்ளுகிருர்கள். கதைப் பொருள் இவ்வளவு தான். ஆனல் கொஞ்சிக் கொஞ்சிக் குழைவுடன் அழகுற நடந்து செல்லும் அந்தச் சிறுகதை நம்மை அப்படியே வியப்பில் ஆழ்த்தி விடுகிறது!

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் கதைகள் நடைவலிமையால் வெற்றி பெற்றவையே. 'கற்பு கற்பு என்று கதைக்கிறீர்களே இது தான் ஐயா பொன்னகரம்' என்று சொல்லும் அவரது நடைவீறுதானே, தலைகுனிந்து கண்ணைத்திறவாமல் செல்லுகின்றவர்களையும் திடுமென உடும்புப் பிடியாகத் தூக்கி நிறுத்தி நோக்க வைக்கிறது? நோக்கல்—நோக்கத்தில் மூழ்க வைக்கிறது?

அங்ஙனமானல் கருத்திலே புதுமை, புரட்சி என்றெல்லாம் உரைக்கப்படுகின்றனவே அவற்றுக்கு என்ன பதில் என்று வினவலாம். மனச்சான்று எப்பொழுதும் எவ்விடத்தும் புதுமையோடும் புரட்சிகரமாக இருந்துகொண்டே யிருக்கிறது. நடைமுறை வாழ்க்கைக்கு மனச்சாட்சியின் குரலைக் கேட்டு அதன்வழி யொழுகினல் ஒவ்வாது, பொருளாதார முன்னேற்றம் கிடைக்காது என்பதற்காகப் பலரும் அதன் கழுத்தை நெரித்து விடுகிருர்கள். தலையைக் கிள்ளித் தூர எறிந்துவிடுகிருர்கள்' மனச்சான்று மடிய மடியப் பணச்சான்று வந்துகுவிகிறது.

ஆயின், ஒரு சிலர் மனச்சான்றின் குரலுக்கு—என்றும் புதுமையோடு பொலியும் அதன் குரலுக்குச்—செவிசாய்க்கின்றனர். அதற்கு மாறுபடாமல் எண்ணுகின்றனர். எண்ணக் கருவாகி எழுத்து தேன்பிலிற்றுகிறது. அதையே புதுமை எழுத்து, புரட்சி எழுத்து என்று கூறுகிருேம்.

காலத்தை யொட்டி மனச்சான்று புதுமை குன்ருது முழங்கிக் கொண்டே யிருக்கின்றது. கடல்நீர் முகிலால் மேலே தூக்கிச் செல்லப்பட்டு மழையாகப் பொழிந்து ஆற்றிடை நடந்து மீண்டும் கடலிற் கலக்கிறது. மீண்டும் அவ்வாறே புதுமையாக முழங்கிப் பொழிகிறது.

இவ்வாறே அடிப்படைக் கரு — உண்மைகள் — இருக்கின்றன, இருக்கும். அவ்வப்பொழுது அவற்றைப் புதுமையொடு கால இயல்பை யொட்டிப் படைப்புக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இருக்கவேண்டும். வான் நோக்கி வாழும் உலகிற்கு வாழ்வு அந்தப் புதுப் பெயலால் பொலிகிறது. கருத்து நோக்கிவாழும் உலகிற்குக் கண்ணளிக்கும் புதுப்பெயலாய் எழுத்துக்கள் பொலிகின்றன.

ஆகவே கதைக்கு வெற்றியளிப்பது நடையே என்று கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

(வத்திராயிருப்பு இலக்கியவட்ட கருத்தரங்க உரை)

---

# பழம் பானை

## கூப. கோ. நாராயணசாமி

ஆடை உரித்தால்
ஆசை கழன்றுவிடும்
போதை ஏறிப்
புரளும் கருவிழியில்

காதல் மின்னும்,
காமன் கணை வெல்லும்;
கற்பனையில் உள்ளம்
குதிபோட நினைத்தால்

விற்பனை யுலக நலி
வேதனை யைப்பாய்ச்சி
வழியை
அடைத்து விடும்;

தாழ்ப்பாளைத்திறந்து
தயங் காமல்சென்ருல்
மண் பாண்டம்இங்கே
மதிப்பாகவிலைபோகும்;

நீர் வைத்துப்போற்றி
நெடுங்காலம்காத்த
பானை பழசாச்சு
பாண்டம் எறிந்தாச்சு.

# நிகழ்கால விமர்சனப் போக்கு

## கே. எஸ். சிவகுமாரன்

ஆங்கில இலக்கிய விமர்சன வரலாற்றைப் புதிய முறையில் விபரிக்கும் புத்தகங்களுள் ஜோர்ஜ் வோட்ஸன் என்பவர் எழுதிய "இலக்கிய விமர்சகர்கள்" :டி லிடரரி கிரிடிக்ஸ் என்ற "பெலிகன்" வெளியீடு குறிப்பிடத்தக்கதொன்று. சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன் டிரைடனுடன் ஆங்கில இலக்கிய விமர்சனம் ஆரம்பமாகின்றது என்று விளக்கும் நூலாசிரியர், மூன்றுவிதமான பெரிய விமர்சன முறைகளை அவ்விமர்சனப் போக்கில் காண முடிகின்றது என்கிறார். அவற்றுள் ஒன்றை 'Legeslative Criticism' என்று வருணிக்கிறார். இம்முறையின்படி கவிஞன் இப்படித்தான் கவிதை இயற்றவேண்டும் என்று விமர்சகன் சட்டதிட்டஞ் செலுத்துதல் ஒரு முக்கிய பண்பாகும். எலிஸபெத்திய காலத்துப் பண்பாகிய இம்முறை இப்பொழுது செத்தொழிந்துவிட்டது.

அடுத்த முறை 'தியரடிக்கல் கிரிடிஸிஸம்' எனப்படும். சித்தாந்த அல்லது இலக்கிய அழகியல் ரஸனை எனப்படும். சுமார் 1570 முதல் 1817 வரையுமுள்ள காலப்பகுதியில் இம்முறை விசேடமாக இங்கிலாந்தில் நிலவிவந்தது. ஆர். ஜி. கொலிங்வூட், ஐ. ஏ. ரிச்சட்ஸ் போன்றோர் இடையிடையே அழகியலில் மனதைப் பறிகொடுத்தனராயினும், இம்முறை கோல்ரிட்ஜின் காலத்துடன் மடியத் தொடங்கியது.

மூன்றாவது முறையை :டிஸ்க்ரிப்டிவ் அல்லது அனலிடிகல் விமர்சனம் என்று வருணிக்கிறார். இம்முறை டிரைடன் காலந் தொடக்கம் சுமார் 300 வருடங்களாக, இற்றைவரை இலக்கியத்தில் நிலவிவருகிறது.

ஆங்கில இலக்கிய விமர்சகர்களில் முக்கியமானவர்களாக ஜோன் டிரைடன், போப், அடிஸன், பீல்டிங், சாமுவல் ஜோண்ஸன், கோல்ரிட்ஜ், வேட்ஸ்வர்த், லாம்ப், ஹஸ்லிட், டிகுவின்ஸி, மத்யூ ஆர்னல்ட், ஹென்றிஜேம்ஸ், டி. எஸ். எலியட், ஐ. ஏ. ரிச்சட்ஸ், வில்லியம் எம்ப்ஸன், எப். ஆர். லீவிஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். இப்பொழுது புதிய புதிய விமர்சகர்கள் தங்கள் முழு ஆற்றலையும் வெளிக்காட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்,

இது இவ்வாறிருக்க—சுமார் 1920ல் அமெரிக்காவில் 'New criticism' என்றொரு புதிய இலக்கிய விமர்சன இயக்கம் ஆரம்பமாகியது. இவ்வியக்கம் பற்றிப் பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் விரிவானதொன்று டி. லேணர் என்பவர் எழுதிய 'நியூ கிரிட்டிஸிஸம்' என்பதாகும்.

" Coined by Joel Spingarn and defined by John crome Ransom the term "New criticism" represents a specifie philosophy of criticism. The work of art is in itself an experience. The critics, appraisal must not contaminate an understanding of the experience by moral, social, historical or other irrelevent material. The new critic considers admission of the history of ideas or its bearing on a poem either 'fallacious, or 'heretical'. The business of criticism must be to inspect the complexities of the work and architectural relationship between the parts and the whole experience which is the artifact."

புதிய இலக்கிய விமர்சகர்கள் எனப்படுபவர்கள் ஒரு படைப்பின் வெவ்வேறு பகுதிகளின் இணைப்பைப் பற்றியும், படைப்பில் உள்ள சிக்கலான விஷயங்களைப் பற்றியும், படைப்பு கொடுக்கும் முழு அனுபவத்தைப் பற்றியும் விமர்சனஞ் செய்யவேண்டுமே யொழிய தார்மீக, வரலாற்று, சமூகப் பார்வை கொண்டு மதிப்பிடுவது தவறானது என்று கூறுகிறார்கள். இவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஸ்பின்கார்ன், ரன்ஸம், அலன் டேட், ஆர். பீ. வோரன், ஐவோர் வின்டர்ஸ், லயனல் டிரிலிங், பாபிட், கிலித் புறூக்ஸ், பிளக்மோர் ஆகியோர்.

'இலக்கிய விமர்சனம்' என்பதை ஈழநாட்டிலும் தமிழ்நாட்டிலும் விளங்கிக்கொண்டது சற்று நூதனமாக இருக்கின்றது. நம்மவர்களுக்கு இலக்கிய விமர்சனம் என்றால் என்ன என்று தெரியாது என்பதல்ல. உண்மையில் பார்க்கப்போனால் நெற்றிக் கண்ணைக் காட்டினும் 'குற்றம் குற்றமே' என்று மொழிந்த நக்கீரன் முதல், உரையாசிரியர்களூடாக, வ. வே. சு. ஐயர் காலந் தொடக்கம், இலக்கிய விமர்சன உணர்வு தமிழரிடையே இருந்து வந்திருக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால் இன்று 'இலக்கிய விமர்சனத்திற்கு, இன்னும் குறிப்பாகச் சொன்னால், 'விமர்சனம்' என்ற பதத்திற்கு மிகவும் விரிவான கருத்துக்களைக் கொடுத்துவிடுகிறார்கள். 'இலக்கிய விமர்சனம்' என்பது ஒரு பெரிய கடல் போன்றது. அதில் பற்பல உள்ளடங்கியவை என்பது உண்மைதான்; அந்த விஸ்தாரத்துக்கேற்ற மாதிரி, 'விமர்சனம்' என்ற பதத்திற்கு விஸ்தாரமாக அர்த்தம் பாய்ச்சமுடியாது என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன்.

சினிமாப் பத்திரிகைக்காரன் எழுதும் செய்திகளும், விவரணங்களும் 'விமர்சனம்' எனப்படுகிறது. சினிமாப் பத்திரிகையில் தரமான விமர்சனம் எழுதுபவனின் எழுத்தும் விமர்சனமெனப்படுகிறது. விளம்பரதாரர்களின் பணத்துக்காக வானொலியில் வானளாவப் புகழ்ந்து வர்த்தகம் செய்யும் ஒலியும் 'விமர்சன'மெனப்படுகிறது. வாசகன் ஒருவன்தான் சுவைத்த தொடர்கதையை மேலோட்டமாகத் தெரிவித்து எழுதும் கடிதமும் பத்திரிகையில் 'நேயர் விமர்சனம்' என்ற பெயரில் வெளியாகின்றது. ஆழமாக நூலைப் படித்துப் பல்வேறு முறைகளில் திறனாய்வதும் விமர்சனம் எனப்படுகிறது. Belles Letters எனப்படும் இரஸனைக் கட்டுரைகளும், appreciations எனப்படும் நயங்காணலும், மற்றும் பற்றி யிலக்கிய வகைகளும் எல்லாமே இலக்கிய

விமர்சனம் எனப்படுகிறது. அப்படியாயின் எல்லாமே விமர்சனமாகிவிடுகின்றது. எல்லாமே விமர்சனம் என்ருல் பின் எதுதான் விமர்சனமில்லை?

புத்தக மதிப்புரை, ஆய்வு, ரஸனை, இலக்கிய சர்ச்சைகள், விவாதங்கள், கண்டனம், அறிமுகம், வரலாற்று, சமூக, தத்துவார்த்த, உளவியலார்த்த மதிப்பீடுகள், மொழிச் சிறப்பு போன்ற பல்வேறு விஷயங்களும் இலக்கிய விமர்சனத்தில் உட்படத் தக்கவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனுல் நம்மில் சிலர் நினைத்துவருவதுபோல கண்டதையும் செப்புவதெல்லாம் விமர்சனமாகாது.

'இலக்கிய விமர்சனம்' என்ற தொடர் உபயோகிக்கப்படும்பொழுது, இலக்கிய வகைகளை மதிப்பிடும் ஒரு உத்திவகை என்ற முறையில், அத்தொடர் குறுகிய அல்லது விசேட அர்த்தம் பெறுகின்றது எனலாம்.

"Literary criticism is not a subject of study in the sense of having corpus knowledge to be mastered; it is rather a technique to be learned" என்கிருர் ஒரு ஆசிரியர்.

அதாவது இலக்கிய விமர்சனமென்பது கற்க வேண்டிய ஒரு உத்தியேயன்றி, அறிவுக்குவியலை ஆளும் சக்திபெறப் பயிலும் பாடம் அல்ல என்பதாகும்.

லயனல் எல்வின் என்ற ஆசிரியர் எழுதிய சில வரிகள், ஈழத்தில் இலக்கிய விமர்சனத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடியதாய் இருக்கின்றன:

"There are to day many readers of books but comparitively few critical readers. But among the readers who would never call themselves "literary critics," there are many with a critical disposition; that is to say they make conscious choices in their reading, they discuss books with their friends, they note the differences between different reviews of the same book and they are interested in any changes that take place in their own taste..."

'இன்று புத்தகங்களைப் படிப்பவர்கள் பலர் இருக்கிருர்கள்; ஆனுல் விமர்சனக் கண்ணேட்டத்துடன் படிப்பவர்கள் மிகக்குறைவு. தங்களை 'இலக்கிய விமர்சகர்கள்' என்று கூறிக்கொள்ளாதவர்கள்பல வாசகர்கள். அவர்களுள் பலர் விமர்சனக் கண்ணேட்டமுடையவர்கள். அதாவது பிரக்ஞை பூர்வமாகப் புத்தகங்களைப் புத்திக் கூர்மையுடன் தரம் பிரித்துப் படிப்பவர்கள்; நண்பர்களுடன் புத்தகங்கள் பற்றிக் கலந்துரையாடுபவர்கள்; ஒரே புத்தகம் பற்றிய வெவ்வேறு மதிப்புரைகளுக்கிடையிலுமுள்ள பேதங்களை நுண்ணிதின் அவதானிப்பவர்கள்; தங்கள் இரஸனையில் ஏற்படும் மாற்றங்களை நோக்குபவர்கள், அதில் மாற்றங்களை நாடுபவர்கள் ......

"But from this to literary criticism seems a very big jump. It seems to involve something professional and to demand an apparatus of scholarship that they cannot hope to possess. Now I do not think this is true, at any rate in the sense which readers fear it......"

'இம்மாதிரியான தங்கள் ரஸனை நோக்கிலிருந்து 'இலக்கிய விமர்சன'த்திற்குச் செல்லல் ஒரு பெரிய பாய்ச்சல்' என்று கருதுகின்றனர். அதாவது இலக்கிய விமர்சனத்தில் ஈடுபடுவதற்குத் தக்க புலமையும், பக்குவமும், ஆற்றலும், அறிவும் தங்களிடம் இல்லாதிருப்பதால், இத் தொழிலில் ஈடுபடத் தயங்குகின்றனர். வாசகர்கள் மேற்கண்டவாறு பயப்படுமளவிற்கு இது உண்மையல்ல...'

"I am not suggesting to be a reasonably good critic of literature is easy or can be achieved without conscious training. That is decidedly not true. But in what does that training consist?... '

'இலக்கியத்தை நியாயமான அளவிற்குத் திறம்பட விமர்சிக்கும் ஆற்றல் இலகுவானது என்று நான் கூறவில்லை. பிரக்ஞை பூர்வமான பயிற்சி இன்றி இதில் கைதேற முடியும் என்றும் நான் இங்கு கருதவில்லை. நிச்சயமாக இல்லை. ஆனுல் அந்த பயிற்சிதான் எது?

'பழைய இலக்கியங்களிலோ, பிறமொழிகளிலோ தொடர்பு கிடையாத எத்தனையோ வயது முதிர்ந்த மாணவர்கள் -- இலக்கியப் போக்குகள், தர்க்கங்கள் பிரிவுகள், வகைகள், வரலாறுகள் பற்றிச் சிறிதளவுதாம் அறிந்த அறிவுடன்—ஆழமான, உண்மையான விமர்சனக் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதை நானறிவேன். மொழியுணர்வுடனும், தங்கள் வாசிப்பை முதிர்ந்த இலக்கிய மதிப்பீடுகள் கொண்டு விருத்தி செய்ததனுலும், அவர்கள் இம்மாதிரியான விமர்சனக் கருத்துக்களைக் கூற முடிந்தது.

'காலப்போக்கில் இத்தகைய பயிற்சி அவர்களிடம் விருத்தியடைந்துகொண்டு செல்லும்பொழுது, இலக்கியப் புலமையையும், அறிவையும், ஆற்றலையும், தகுதியையும் பெற்று விடுகிருர்கள்...'

எஸ். எல். பேத்தல் என்பவர், 'வாழ்க்கையைப் போன்று இலக்கிய விமர்சனத்தின் எல்லைக் கோடுகளும் விரிந்தவை; இலக்கிய விமர்சனம் என்பது ஒரு தூய விவகாரமல்ல' என்கிருர்.

"There is no purely aesthetic standard in literary criticism or if you prefer it, the aesthetic judgment is formed not only upon aesthetic content and ade quacy of expression but upon importance of mature and depth of insight as well,'—

'இலக்கிய விமர்சனத்தில்—தூய அழகியல் மூல அளவோ, பரிமாணமோ இல்லை; அழகியல் உள்ளடக்கமும், போதிய வெளிப்பாட்டும் மாத்திரமல்லாது, முதிர்ந்த ஆழமான, நுண்ணிய விசாரணையும் முக்கியமாகச் சேர்ந்தே அழகியல் முறையான விமர்சனத் தீர்ப்பு உருவாகின்றது...ஒரு ஆசிரியனின் அடிப்படைச் சித்தாந்தங்கள், உத்தேசங்கள், மதிப்புகள் ஆகியவற்றையும், அவன் வாழும் காலத்தையும் எடைபோட்டே அவனின் படைப்புகள் பற்றிய மதிப்பீடும் எழுகின்றது.'

டேவிட் டெயிச்சி என்பவர் கூறுகிருர்.

"Literary criticism may simply seek a to increase appreciation on the header's part by any one of the great variety of methods ranging from objective demonstration of certain qualities to impressionistic (or even autobiographical)

revelation of how the work affects the critic. The critic's activity may then be psychological, ontological, funcional, normative, descriptive or appreciative. Each of these activities has its place and its usefulness and the many questions involved can be and have been asked in many different ways."

இதன் சுருக்கம்:—

'ஒரு படைப்பு தன்னை எப்படிக் கவர்கின்றது என்பதை விமர்சகன் பலவிதங்களில் விளக்குகிறான். தத்துவார்த்தமாக, செயல்முறையாக, உறுப்பார்த்தமாக, உளவியல் படிந்தமதிப்பீட்டுடன், ரசனை வெளியீட்டாக, விளக்க அறிமுகமாகப் பலவிதங்களில் தன் செயலில் ஈடுபடலாம். இவை ஒவ்வொன்றும் தனித்தனியே பயனுடையது...'

உடனிகழ்கால இலக்கிய வகைகள் (நாவல், சிறுகதை, நவீன நாடகம், புதுக் கவிதை, மற்றும் உரை நடையிலுள்ள ஏனைய வகைகள்) எல்லாம் வசதியை முன்னிட்டு இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட ஒரு கதை அல்லது நாவல் உண்மையிலேயே இலக்கிய மதிப்பு பெற்றிலாதிருக்கலாம்; ஆனால் அது கொண்டுள்ள வடிவம், அங்கீகரிக்கப்பட்டுள்ள நவீன இலக்கிய வகைகளுள் – அதாவது சிறுகதையாகவோ, நாவலாகவோ, ஏதோ ஒன்றாக இருப்பதனால், அதனை நவீன இலக்கிய வகையைச் சேர்ந்தது என்கிறோம். எந்த ஒரு படைப்புமே அது உருவாகிய காலத்தில் ஏகமனதாகவே ஒப்பற்ற இலக்கியம் என்று பிரகடனப்படுத்தப்படுவதில்லை. ஒரு படைப்பின் சிறப்பையும் வாழ்வையும் காலமே தீர்மானிக்கின்றது. ஆதலால், இன்று எழுதப்பட்ட ஒரு சிறுகதை இலக்கியத் தகுதி பெறத்தக்கது என்று விமர்சகர்கள் கொண்டாடினால் மாத்திரம் அது இலக்கிய மதிப்பைப்பெறுவது நிச்சயம் என்று சொல்வதற்கில்லை. காலப்போக்கிற்தான் உண்மையான மதிப்பீடு உருவாக வழியுண்டு.

---

(சத்யாக்ரகி 218-ம் பக்கத் தொடர்ச்சி)

'இல்லை' என்று நான் இழுத்தேன். 'இத்தனை மிதி வாங்கின அந்த தார்ரோடு பெயர்ந்துபோய் அதுக்கு அடியிலே இருக்கிற அன்றைய ரத்த மண்ணை வெளிக்காட்டுமா என்று பார்க்கிறேன், என்றேன்.

அவர் முதுகில் ஒரு தட்டு தட்டினார். நீங்கள் எப்போதும் பழய காலத்திலேயே தான் இருப்பீர்கள் போலிருக்கிறது.' கேலி செய்து சிரிப்பு. 'வாருங்கள் பக்கத்தில்தான் என்வீடு. போவோம் தம்பி நீயும்.. தம்பி ஊர்வலத்தின் பின்னால் போய்விட்டான் போலிருக்கு. அங்கே இல்லை.

அவருக்கு நான் பதில் எதுவும் சொல்ல அவசியம் இல்லை. தன் வலது கையால் துடையை தாங்கிக்கொண்டு சாய்ந்த நடை போட்டுக்கொண்டு அவர் முன்போக நான் அந்த காலை பார்த்துக் கொண்டே பின் நடந்தேன்.

(206-ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டிய இடம் பிரஸ் ரிஜிஸ்டிரார். போலீஸ் இலாகாவுக்கு புள்ளி விவரம் தெரியவும், பரிசீலிக்கவும். நூல் நிலையத்துக்கு அந்த வேலை இல்லை. அறிவை வளர்க்க, ரசனையை பெருக்க - அதுதான் உத்தேசம். எனவே நூல் நிலையங்கள் புத்தகங்களின் தொகையை பெருக்கும் ஆவலில் 'இடம்பெறத் தகுதி இல்லாத' புத்தகங்களை எல்லாம் வாங்கி அடைப்பது கூடாது. தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்தி என்றைக்கும் பயன்படக்கூடிய நூல்களையே சேர்க்கவேண்டியதுதான் முக்கியமானது.

மேலே குறிப்பிட்ட மூன்று, நான்கு பிரிவுகளுள் வரும் நூல் நிலையங்கள் இன்று எவ்வாறு இயங்குகின்றன, தரமான புத்தகங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப் படுகின்றனவா என்று பார்க்கப்போனால் - தனித்து விதிவிலக்குகள் இருந்தாலும் பொதுப்படையாக திருப்திதரக்கூடிய வகையில் புத்தக சேகரிப்பு இல்லை என்றே அங்கொன்றும் இங்கொன்றுமாக சோதித்துப்பார்த்த அளவில்கூட ஒருவர் சொல்லமுடியும். இப்போதைய நிலையை 'புத்தக உற்பத்தி காலம்' என்பதைவிட 'பப்ளிஷர்கள் உற்பத்தி காலம்' என்றுதான் சொல்லவேண்டும். மேலே சொன்ன பிரிவுகளின் நூல் நிலையங்களுக்கு இந்த 'பப்ளிஷர்கள்'-புத்தகத் தயாரிப்பை ஒரு வியாபாரத் தொழிலாக மட்டுமே கொண்டுவிட்டவர்கள் - தாங்கள் போட்ட புத்தகங்களை கொண்டுபோய் 'தள்ளுகிறார்கள்.' அவர்கள் தள்ளுகிறதை அப்படியே மொத்தமாக வாங்கி அலமாரிகளில் 'அடைத்து விடுகிறார்கள்' நூல் நிலைய பொறுப்பாளர்கள். இதுதான் தோன்றுகிறது, இந்தமாதிரி நூல் நிலையங்களை பார்க்கிறபோது.

இந்த மாதிரியான பெருக்கத்தை வளர்ச்சி என்று கூற முடியாது. புத்தகங்களை தேர்ந்தெடுக்கும் முறையில் ஒரு விஷயம் தேர்ந்த பார்வை செலுத்தப்பட வேண்டும். அதுவும், இலக்கிய நூல்கள் சம்பந்தமாக. நல்ல, தரமான இலக்கிய நூல் என்று மதிப்பிடத் தெரிந்த தனிப்பட்டவர்களோ, அல்லது ஒரு குழுவோ வேறெந்த செல்வாக்குக்கும் உட்படாமல் இதை செய்ய முடிந்தால்தான் நூல் நிலையங்கள் உண்மையான நூல் நிலையங்களாக இருக்கும். இந்த சமயத்தில் இன்னொன்றையும் யோசனை சொல்ல விரும்புகிறோம் இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் கவனததுக்கு. நல்ல புத்தகங்கள் எவை என்ற ஒரு குறிப்பு இன்று வாசகனுக்கு உடனடியான தேவை. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் போன்ற துறைகளில், அந்தந்த துறைகளின் வளம்பற்றிய தகவல்களை கொடுத்து இலக்கிய வாசகனுக்கு ஒரு 'வழிகாட்டி, தேவை.

---

கோலன் (:) நிறுத்தக் குறியின்
புது உபயோகம்

| | | |
|---|---|---|
| க (ka) | — | : க (Gha) |
| ச-வுக்கு | — | : ஜ இருக்கிறது |
| ட (Ta) | — | : ட (Da) |
| த (Tha) | — | : த (Dha) |
| ப (Pa) | — | : ப (Bha) |

# பூச்சிறை

அன்று--
மண்வாழ்ந்த என்னை
மாவாசம் இழுக்க,
தடவித் தேடியோடி
கிளையூர்ந்து,
இலைதடவி,
இறுதியில்—
உச்சித்துளிர்
மெத்தையொன்றில்
உறங்கினேன் சொகுசாக.
இடை இடையே கனவு:
மென்மை மிகவழிந்து
போர்த்தியது இதழிதழாய்.
வாசம் பெருகி, சுற்றிலும்
தேக்கியதோர் தேனேரி...
பின்னொரு நாள்.
துடிதுடித்துக்
கண்விழித்தேன்.
மஞ்சள் சதை மின்ன
மாம்பழக் கட்டிலில்!
மெத்தை குழிந்தென்று
தொட்டிலாச்சு?
நினைப்பதற்குள்—
ஓர் எஃகுமின் சிரிப்பு.
தொட்டிலைக் காணோம்!
என்னையும்...?

நா. வெங்கட்ராமன்

# நீயும் நானும்

தடியின் உதவியில்
தளர்நடை எனக்கு,
தளிர்நடை உனக்கு
தாய்மடி தவழ்தலில்.
பல்
உனக்கும்
எனக்கும்
?
மதலை மொழி உனது
குழலும் மொழி எனது
தொட்டில் உனக்கு தஞ்சம்
கட்டில் எனக்கு மஞ்சம்
பொக்கை வாய்
புனசிரிப்பு
உனக்கும்
எனக்கும்

எம். சி. ஜெயப்ரகாசம்


## எழுத்து பிரசுரங்கள்

**ஜீவனாம்சம்**
சி. சு. செல்லப்பா
ரூ. 4-00

**காட்டுவாத்து**
ந. பிச்சமூர்த்தி
ரூ. 5-00

**அறுபது**
சி. சு. செல்லப்பா
ரூ. 5-00

**புதுக்குரல்கள்**
கவிதைத் தொகுப்பு
ரூ. 4-00

**எதற்காக எழுதுகிறேன்?**
கட்டுரைத் தொகுப்பு
ரூ. 2-00

முகவரி :

எழுத்து பிரசுரம்
19-A, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை – 5


EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5,
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5.